நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

செந்தமிழ்

பகுதி: 5
தொகுதி: 112
திருவள்ளுவர் ஆண்டு 2049

திங்கள் இதழ்
விலை: ரூ.20
மே - 2018

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்ப முரளி**	உறுப்பினர்
பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறியாளர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. **இதழ் மணம்** 4

2. **அடக்கம் கொள்க** 6
- பேராசிரியர் **மு.மணிவேல்**

3. **சிலப்பதிகாரப் புதையல்கள் - குன்றக் குரவை** 9
- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

4. **குயில் பாட்டில் மெய்ப்பாடு** 15
- பேராசிரியர் **செ.வை.சண்முகம்**

5. **தமிழர் கண்ட முழுமுதற் கடவுள்** 21
- பேராசிரியர் **ப.மருதநாயகம்**
சென்ற இதழின் தொடர்ச்சி

6. **இறந்தகாலம் - ஒரு புதிய பார்வை** 30
- பேராசிரியர் **இரா.கோதண்டராமன்**

7. **சங்கச் செய்திகள்** 40

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

பெரியோர்களாகிய துறவிகள் உண்ணாது நோற்பர்; உலகியலில் பிறர் சொல்லும் வசைமொழிகளைக் கேட்டுப் பொறுத்துக்கொள்வது அதைவிடப் பெருந்தவம். சகிப்புத்தன்மை உலகியலில் குறைந்து பொது ஒழுக்கம் குன்றியுள்ளது. அதனால் உலகெங்கும் சமுதாயக்கேடு பெருகியுள்ளது. பேராசிரியர் மு.மணிவேல் "அடக்கம்கொள்க" என்னும் கட்டுரையில் அடக்கத்தின் மாண்பை விளக்கும் நுட்பம் இனிமையும் எளிமையும் நிறைந்து கற்போருக்கு இன்பம் பயக்கிறது. கட்டுரை எளிமையாகப்புரியும் வண்ணம் அமைந்திருப்பது அவருடைய தமிழ் மாண்பு.

பேராசிரியர் இரா.இளங்குமரனார் சிலப்பதிகாரப் புதையல் என்னும் தலைப்பில் "குன்றக்குரவை" வஞ்சிக்காண்டத்தின் தோற்றுவாயாக அமைந்து வெளிப்படுத்தும் தமிழியல் மாண்பை நுட்பமாக எடுத்துரைக்கின்றார். தமிழ் இலக்கியம் அறத்தொடு நிற்றல் என்பதை விளக்கும் வாழ்க்கை இலக்கியம்; அதனை ஆசிரியர் இளங்கோ எடுத்துரைத்து வஞ்சிக்காண்டம் வழியாக கண்ணகி கோவலன் தெய்வ மாண்பை உலகறியச் செய்த குன்றக்குரவர் தொடங்கி தண்டமிழ் ஆசான் சாத்தனார், கடல்சூழ் இலங்கைக் கயவாகுமன்னன் ஈறாகக் கதைமாண்பை போற்றிய திறத்தையும், உலகம் அப்பெருங்காப்பியத் தலைவிக்குக் கோயில் எடுத்துப் போற்றிவரும் மாண்பையும் வஞ்சிக்காண்டம் எடுத்துரைப்பது காப்பியத்தின் முடிமகுடமாக அமைந்திருப்பதை ஆசிரியர் ஆய்வாளர்கள் போற்றும் வண்ணம் சிறிய கட்டுரையில் அரிதின் விளக்கும் மாண்பு அறியத்தக்கது.

"குயில் பாட்டில் மெய்ப்பாடு" என்னும் தலைப்பில் பேராசிரியர் செ.வை.சண்முகம் எழுதியுள்ள கட்டுரை ஆய்வுநோக்கில் அமைந்து பாரதியின் ரச உணர்வு தொல்காப்பிய இலக்கியத்தோடு பொருந்தி வருவதைக் காட்டுகிறார். கால வெள்ளத்தைக் கடந்து புதுயுகத்திலும் இலக்கிய ரசனையின் தோற்றம், பொருட்பரிமாணம் குயில்பாட்டில் காணமுடிவதை வாசகர்களுக்கு ஆசிரியர் வெளிப்படுத்தும் ஆற்றல் குயில்பாட்டை மீண்டும் மீண்டும் படிக்கத்தூண்டும் வண்ணம் அமைந்துள்ளது. பாரதியின் குயில்பாட்டு திறனாய்வாளரிடையே முடியாத

விரிந்த பொருளாகப் பேசப்படும்; பாரதியும் அதன் உள்ளீட்டை மெய்யுணர்வாளர்களின் சிந்தனைக்கு விட்டுள்ளார்; பேராசிரியர் செ.வை.சண்முகமும் தன் பங்கிற்கு குயில்பாட்டை மீண்டும் ஒருமுறை ரச பாவத்தோடு படியுங்கள் என்று கட்டுரையை விரிவாக எழுதியுள்ளார்.

பேராசிரியர் ப.மருதநாயகம், "தமிழர் கண்ட முழுமுதற் கடவுள்" என்னும் தலைப்பில் கடவுள் என்னும் சொற்பொருளின் ஆழத்தையும் தமிழர் கண்ட மெய்ப்பொருள் உணர்வையும் வெளிப்படுத்தி பழங்காலம் முதல் பழகிவந்த உணர்வின் வெளிப்பாடு "கடவுள்" என்னும் சொல் என்பதையும் முற்பகுதியில் விளக்கினார். இப்பகுதியில் அதன் தொடர்ச்சியாகத் தமிழர் கடவுள் உணர்வு சமயச்சடங்கும் நம்பிக்கையும் அல்ல; சடங்கும் நம்பிக்கையும் உண்மையல்ல; அதற்கப்பால் மெய்யுணர்வு தமிழ்ச்சான்றோர்களால் இலக்கியங்களில் பேசப்படுவதை இப்பகுதியில் எடுத்துரைக்கிறார். கட்டுரை விரிவும் பொருள் ஆழமும் நுட்பமும் உடையது. தமிழர் சிந்தனையை மேலை நாட்டு அறிஞர் பலரும் ஆய்வுப் பொருளாகக் கண்டு திளைத்திருப்பதையும் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளது எண்ணற்பாலது.

பேராசிரியர் இரா.கோதண்டராமன் இறந்தகாலம் ஒரு புதிய பார்வை" என்னும் தலைப்பில் மொழியியல் கட்டுரை எழுதுகிறார். இக்கட்டுரை மாணவர்களும் ஆசிரியர்களும் விவாதப் பொருளாக எடுத்து வகுப்பறைகளில் சிந்திக்கத்தக்கது. இலக்கணப் பயிற்சியும் மொழிநூல் திறமும் பழந்தமிழ் திராவிட மொழிக்கூறுகளும் கட்டுரையின் மையப் பொருளாக அமைந்திருப்பதைக் கற்பது ஆய்வுப்பார்வையை விரிவுபடுத்தும்.

செந்தமிழ் இதழ் ஆண்டுச்சந்தா அனுப்பாத அன்பர்கள் சந்தா அனுப்பி தமிழ் வளர்ச்சிக்கு உதவுங்கள். தமிழ்ப்படிப்பவர்களை "செந்தமிழ் இதழ்" சந்தாதார் ஆக்குங்கள். இத்தகு முயற்சியும் தமிழ் வளர்ச்சிப்பணி என்பதை எண்ணுங்கள்.

அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

குறள் - 74

அடக்கம் கொள்க

பேராசிரியர் **மு.மணிவேல்**
தமிழியற்புலத் தலைவர், (ப.நி)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை 625 020
கைபேசி: 98655 346222

பட்டங்கள் பல பெற்றாலும், பதவிகள் பல பெற்றாலும் செல்வங்கள் குறைவின்றிப் பெற்றாலும் மனதை அடக்கத் தெரியாவிட்டால் மதிப்பிற்குரிய மனிதனாக ஆக முடியாது. அடக்கமே அறிவுடைமையின் சிறந்த அடையாளமாகும்.

'ஆற்றலில் மிகப்பெரியது மனஅடக்கும் ஆற்றல்' என்கிறார் ஜோசப் ஸ்டாலின்.' சொல், செயல், சிந்தனைகளில் ஒன்றாக விளங்குவோரே உலகத்தை ஆட்டி வைக்கமுடியும் என்கிறார் விவேகானந்தர். அறிவுச்சுரங்கத்தைத் திறப்பதற்கான திறவுகோல் மன ஒருமைப்பாடு ஆகும் என்றும் அவர் கூறுகிறார்.

மனத்தை அடக்குவோர் உலகத்தை ஆள்வர். 'பொறுமையிலும் உயர்ந்த தவமில்லை' என்கிறார் குருநானக்தேவ். 'அமைதியான குளத்தில்தான் தாரகைகள் (நட்சத்திரங்கள்) தெரியும்' என்பது சீனப்பழமொழி. இவையெல்லாம் மன அடக்கத்தின் சிறப்பையும், அதனை அடக்குவோர் உயர்வையும் உயர்த்திக்கூறும் கருத்துரைகள்.

'பொறுமை கடலினும் பெரிது' என்றாலும் - 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்பது பொருள் பொதிந்த முதுமொழி.

'அடக்கத்தை நற்பொருளாகக் கருதிக் காக்க' என்கிறார் வள்ளுவர். அதைக்காட்டிலும் சிறந்த (ஆக்கம்) செல்வம் உயிருக்கு வேறு இல்லை என்றும் உரைக்கிறார்.

"*காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்*
அதனினூஉங் கில்லை உயிர்க்கு"

'அடக்கம் ஆயிரம் பொன் தரும்' என்பது பழமொழி.

அறிவறிந்து அடங்கப்பெற்றால் சீர்மை பயக்கும். அடக்கம் உடையார் அறிவிலர் என்று கருதுதல் வேண்டாம். ஓடுமீன் ஓட உறு மீன் வரும் அளவும் கொக்குக் காத்திருப்பது போல அடங்கி இருப்பார் பயன் எய்துவர்.

"அடக்கம் உடையார் அறிவிலார்என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம் - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வரும்அளவும்
வாடி இருக்குமாம் கொக்கு" (மூதுரை)

என்பது அடக்கம் பற்றி ஔவையார் கூறும் மூதுரை)

தன்னிலையில் தாழாமலும் மாறாமலும் அடங்கியிருப்பவனின் சிறப்பு மலையைக் காட்டிலும் மிகப்பெரியதும் சிறப்பும் உடையது என்கிறார் வள்ளுவர்.

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது" (குறள்.124)

எல்லாருக்கும் நன்றாவது அடங்கியிருத்தலும் பணிதலும் ஆகும். அத்தகையவர்க்கே செல்வமும் சென்று சேரும். அடங்கியிருப்போன் தெய்வத்துள் ஒருவராய் ஆவர் என்றும், அடங்காதான் நரகத்துள் வீழ்வான் என்றும் கூறுகிறார் வள்ளுவர்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்" (குறள்.121)

அடக்கம் என்பது மன அடக்கம் மட்டுமன்று; ஐம்புலன்களையும் அடக்குதலும் ஆகும். மெய், வாய், கண், காது, மூக்கு எனும் இவ்வைந்து புலன்களும் அவற்றிற்குரிய இயங்குநிலையில் மேம்படாது, மிகுதிப்படாது அளவினால் அடங்கி இருப்பின் மிக நன்று. ஐம்பொறிகளை அடக்கி ஆள்பவனுக்கு எழு பிறப்பிலும் பெருமையும் பாதுகாப்பும் அமையும்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள்.126)

புலன்களில் எதைக் காக்காவிட்டாலும் நாவினைக் காக்கவேண்டும். இல்லையாயின் சொல்லிழுக்குப்படுவர்.

"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (குறள்.127)

என்பது வள்ளுவம்.

தீச்சொல் நன்றாதாகிவிடும் என்கிறார். அவ்வள்ளுவர் இனியன பயக்கும் நல்ல சொற்களையே சொல்லுதல் வேண்டும். தீயினால் சுட்ட வடு ஆறி மாறிப்போகும்; இழிந்த சொற்களால் - நாவினால் சுட்ட வடு

மனத்தில் நிலைத்து, மாறாது நினைக்கப்படும் வடுவாய் நிற்கும் என்கிறார்.

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு" *(குறள்.129)*

கால்தடுமாறினால் சமாளித்துக் கொள்ளலாம். நாக்குத் தவறினால் மீளவே முடியாது' என்கிறார் பிராங்ளின். நாவினை மட்டுமல்லாது ஐம்பொறிகளையும் அடக்கி ஆட்சி கொள்ள வேண்டும். 'ஐம்பொறி ஆட்சிகொள்' என்கிறார் பாரதியார். ஐம்பொறிகளை அடக்காதவன் நரகத்தில் வீழ்வான் என்கிறது ஏலாதி எனும் அறநூல். ஐம்புலன்களை அடக்கத் தெரியாதவர்கள் மூடர்கள்; அடக்கத் தெரிந்தவர்கள் ஞானியர். 'புலனடக்காதவர்களைப் புல்லறிவாளர்கள்' என்கிறார் சிவப்பிரகாசர்.

மனம் அடக்குவோரும், புலனடக்குவோரும் கோபத்தை அடக்குதல் வேண்டும். சினத்தை அடக்கி ஆள்பவனாயின் அவனே சிறந்த மனிதன் ஆவான். அவனிடத்தில்தான் அறம் தங்கும் செல்வம் சேரும் என்கிறது குறள்:

"கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து" *(குறள்.130)*

என்பது அக்குறள்,

"தீராக் கோபம் போராய் முடியும்" (கொன்றை வேந்தன்)

என்பதனால் ஔவையார், 'ஆறுவது சினம்' (ஆத்திசூடி) என்கிறார்.

சினம் அடக்கக் கற்றாலும் மனம் அடக்கக் கல்லாதார்க்கு இறையருள் வாய்க்காது என்கிறார் தாயுமானவர்.

"சினமடக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமடக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

என்கிறார்.

'புத்தர், மகாவீரர் போன்றோர் புலனடக்கிப் புகழும் வழிபாடும் கொண்ட பெரியோராவர்.

'மனம் என்னும் குதிரையைச் செலுத்துகின்ற மனிதன் மதி என்னும் கடிவாளத்தால் அதனைக் கட்டுப்படுத்தி, நாவடக்கி, சினம் நீக்கினால் உயர்நிலையும் உயர் புகழும் அடையலாம். அடக்கமாய் ஆற்றல் காட்டுவோம்.

சிலப்பதிகாரப் புதையல்கள்

11 குன்றக் குரவை

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

அடிகள் படைப்பு:

தமிழ்ப் பாவிகத் தந்தையும் தாயுமாக இலங்குவது **சிலப்பதிகாரம்;** அப்பாவிகம் கொண்டே **தண்டியலங்காரம்** "பெருங்காப்பிய நிலையே பேசுங்காலை" எனத் தொடங்கிப் பேசியது. இது முதற் சிறப்பு!

செந்தமிழ் என்னும் பெருமையை வெளிப்படுத்திப் பேசியது **தொல்காப்பியம்.** அச் செந்தமிழுக்கு, **'முத்தமிழ்'** என்னும் பேற்றை வழங்கியது சிலப்பதிகாரமே. இஃது இரண்டாம் சிறப்பாம்!

தொல்காப்பியர் மணவாத் துறவரா, இல்லறத்தரா-பெரிதும் பின்னவராகவே கொளல் சால்பு!

திருவள்ளுவர் மணவாத் துறவரா, இல்லறத்தரா-பெரிதும் பின்னவராகவே கொளல் சால்பு!

ஆனால், இளங்கோவடிகள் வெளிப்பட அறியப்பட்ட **துறவர்; மணவாத்துறவர் மட்டுமா? அரசும் துறந்திருந்த அடிகள்!** குணவாயில் கோட்டத்துக் குடிகொண்டு, தமிழர் நெஞ்சமெல்லாம் குடியேறி, குடியேறிய நாள் தொட்டுத் தமிழுலகர் நெஞ்சங்களில் எல்லாம் கொலுவிருந்து கோலோச்சிக் கொண்டிருப்பவர். **இதன் சிறப்பென்ன?**

"துறவர்களே துறவர்களே, தமிழைத் துறவாதீர், தமிழ்க் கலைகளைத் துறவாதீர்; இல்லறம் துறவறமாம் ஆகிய இரண்டறங்களையும் மதியுங்கள்; சமயச்சால்பும், அரசு ஒருமிப்பும், இறைமைப்பேறும் துறவாதீர்" - என்று ஏறத்தாழ ஈராயிர ஆண்டுகள் அறைகூவல் விட்டுக்கொண்டு, புகழ்வாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பவர் - இது மூன்றாம் சிறப்பு!

"இயற்கையே இறைமை; இறைமை வழிபாடே வரி, வாரம், நடம், கூத்து, ஓவியம், சிற்பம், கருவி, கண்டம் என்பவையெல்லாம் எல்லாம், **இயைந்து புணர்ந்து கலந்து ஒன்றாகி நிற்கும் வாழ்வியல் நிலை"** என்பதைத் **'தாதா'வாகத் தமிழ்மண்ணுக்குத் தந்த தவப் பெருஞ்சான்றோர்** - இது நான்காம் சிறப்பாம்!

இச் சீர்மைச் சிலம்பின், மூன்றாம் காண்டமாம் **வஞ்சிக்காண்டத்தின்**

முகமாக விளங்குவது **குன்றக்குரவை.**

பாடல், காதை, வரி, குரவை, மாலை என்னும் ஐவகையால் முப்பது பகுதியாய் அமையும் காப்பியத்தின் 24-ஆம் பகுதியாய், குரவைப் பெயரதாய் அமைவது குன்றக்குரவை. முன்னொரு குரவை (17) **ஆய்ச்சியர் குரவை.** ஆயர்பாடிக்கண்ணனை நோக்கியது அது.

தீக்குறி கண்டு அதனைத் தீர்க்க ஆடியது ஆய்ச்சியர் குரவை;
கண்ணகி கோவலனொடு விண்ணகம் புக்க தெய்வக்கோல
இறும்பூதால் பாடியது குன்றக்குரவை.

முன்னது **மாயவனைப்** பற்றியது. பின்னது **வேலவனைப்** பற்றியது. அடியளவால் 134 அடிகளையுடையது. உரைப்பாட்டு மடையாகத் தொடங்கி அப்பாட்டு மடையாலேயே முடிவது. அரிய **உள்ளுறையுடையது; விண்ணகக் காதலர் ஆகிய கோவல கண்ணகியரை முன்னிட்டுப்பாடி, மண்ணகக் காதல் அரணமாம் அறத்தொடு நிலையைத் திறத்தொடு கூறுவது.**

குரவையாவது எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடும் கூத்து. (17:5 அடியார்க்)

குன்றத்துக்கண் ஆடிய குரவையாகலின் இப்பெயர் பெற்றது.

குன்றத்து மகளிர் தினைப்புனம் காத்து, அருவியாடியும் சுனையில் சுழன்றும் வருகின்றனர். வரும் வழியில் மலைவேங்கை நிழலில், **தாம் வழிபடும் வள்ளியே** போலத் தோன்றும் **கண்ணகியாரைக்** கண்டு **"யாவிரோ?"** என வினாவினர்:

"மணமதுரையோடு அரசுகேடுற வல்வினைவந்து உருத்தகாலைக்
கணவனையங் கிழந்து போந்த **கடுவினையேன்** யான்"

என்கிறார். மார்பிழந்து நின்ற காட்சி உருக்கியதை அன்றி, மற்றொன்றும் **கரவிலா மலைவாணர்க்கு வேண்டுமோ?** வணங்கினர்; அஞ்சினர்; கைகூப்பிக் கொண்டு நிற்கின்றனர்; வானவர் மலர்தூவி கணவனொடும் அவரை விண்ணகம் கொண்டு போயினர்; உருக்கம் அச்சம் தொலைய, வியப்பு விஞ்சியது. தெய்வத் தோற்றம் எய்தியது. **"இவள் போலும் நம் குலத்திற்கு ஒரு தெய்வமில்லை"** என்னும் உறுதிக்கு வந்து விட்டனர் கொடிச்சியர்.

"சிறுகுடியீரே சிறுகுடியீரே, நறுஞ்சினை வேங்கை நன்னிழற்கீழ் ஓர் தெய்வம் கொள்ளுமின்! பறைமுழக்குங்கள்! கொம்பு ஊதுங்கள்! குறிஞ்சி பாடுங்கள்! புகை எடுங்கள்! பூப்பலி இடுங்கள்!" என்று கூறுமாறு

கண்ணகியார் **கற்புமாண்பால் கடவுள் ஆகிவிட்டார், குறிஞ்சி வாணர்க்கு! போரின் வீறு அமர நிலை என்றால், இக்கற்பின் வீறு அமரிநிலையாம். அமரி, குமரி என்பது வேட்டுவ வரி (67)**

அருவியில் ஆடிவந்த மகளிர், கண்ணகியைக் கண்டு வியந்து வாழ்த்திய போது பொழிந்த மழை, **அருவியை வானவில் ஆக்கிற்று!** அத்தனை வண்ணநீராக அருவி வழிந்தது! இந்திரவில்லின் எழில் கொண்டு இழுமென்று விழுகிறது! அருவி ஆடுவோம் என்று ஆடிப் பாடிச் செல்கின்றனர். **அறத்தொடு நிலை கிளர்கிறது.**

நம் நலத்தை நுகர்ந்தான். 'அஞ்சாதீர்' என்றான்; அவன் நம் நலத்தை மீளத் தந்தானல்லன்! அவன் அருவியில் ஆடுகிறோம்! அவன் மலையில் கல்லை உருட்டிக் கொண்டு வந்துவிழும் **அருவிமேல் வெறுக்க இடமில்லை. வெறுக்க இடமாக இருப்பது என்னைத் தவிரப் பிறரும் அந்நீரில் ஆடியதுதான்! ஆடலாமா?**

"**மற்றையார் உற்றாடி**னோம் தோழி!
மற்றையார் முன்னாடினோம் தோழி!
மற்றையார் மீதாடினோம் தோழி!"

என்று வருந்துகிறாள் தலைவி! **தலைவன் நாட்டு அருவி நீரில் தான் தவிரப் பிறர் ஆடலாமா?** கண் சிவக்க நீராடினோம்; இனி, வேல் ஏத்திக் குரவை தொடுத்துப் பாடுவோம் என்று **தெய்வம் பராவுகின்றனர்.**

"***சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்***
ஏரகமும் நீங்கா இறைவன் கைவேல்"

சிறப்பினைப் பாடுகின்றனர்; வரைவு (திருமணம்) முடிவதற்காக!
சிலம்பன் செய்த நோய் தீர்க்க அறியாள் அன்னை;
வேலனால் வந்ததென்று வெறியாட்டை நினைக்கிறாள்;

இது நகைப்புக்கு உரியது. உண்மையறியாமல் வெறியாட வேலன் வந்தால், அவன் மடவன்; அவன் மட்டுமல்ல அவன்மேல் ஏறி ஆலமர் செல்வன் வருவனெனின், அவன் அவனினும் மடவன்.

வெறியாடும் களத்திற்கு மயில்மேல் மாணிக்கம் வந்தால், அவனிடம் "**அறம்பிழைத்தானின் மண அணி வேண்டுவோம்; அயலவர் மணம் ஒழி; அவர் மணம் அருள்**" என்போம். குறவர் தம் மகளார் நிலையுயர் கடவுளே, உன் இணையடி தொழுதேம்; **பலரும் அறியும் மணம் தருக; பிழை மணம் தவிர்க** என்போம்" எனப் பாடுகின்றனர்; ஆடுகின்றனர்.

இவ்வாறு தோழியும் தலைவியும் பிறரும் பாடுதலை, ஒருசார் நின்று கேட்கும் தலைவன் முன், தோழி சென்று தொழுது,

"கடம்பு சூடி உடம்பிடி ஏந்தி
மடந்தை பொருட்டால் வருவ திவ்வூர்;
அறுமுகம் இல்லை; அணிமயில் இல்லை;
குறமகள் இல்லை; செறிதோள் இல்லை;
கடம்பூண் தெய்வ மாக நேரார்
மடவர் மன்றஇச் சிறுகுடி யோரே"

என்று கூறினாள் அது கேட்ட தலைவன், தானே வந்து வரைவன், நாம் கண்ணகிக்குக் கணவனைக் காட்டிக் கொடுத்த நிலையைப் பாடுவோம்.

கோமுறை நீங்கத் தீமுறை செய்தாளை யாம் பாடும்போது, வெற்பன் மணவணியை வேண்டுவம்; இதனைக் கண்டு காதலர் வந்து மகிழ்வர். இமயத்தொடு கொல்லி ஆண்ட குடவர் கோமான் வாழ்க! என்று வாழ்த்திக் குரவை பாடி முடிக்கின்றனர்.

"காப்பியத்தின் போக்கில் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம் போல, வஞ்சிக்காண்டம் ஒட்டுவதாக இல்லை. காப்பியக் கதை மதுரைக்காண்டத்திலேயே முடிந்து போகின்றது; ஆதலால், வஞ்சிக்காண்டம் ஒட்டுப் போடப்பட்டதோ" என ஐயுறுவர் சிலர்.

அவர், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதையோ, கணவனை மீளக் கண்டு விண்ணகம் போனதற்காம் சான்றை நேரில் கண்டு நாட்டுக்கு உரைத்தாரையோ அவர் தெய்வநிலை உற்றார் என்பதையோ அறிதற்கு வஞ்சிக்காண்டம் வேண்டியதாயிற்று என்றும், அதன் முகப்பு குன்றக் குரவையே என்றும் கொள்ளல் முறை.

குன்றக்குறவர் கண்ட காட்சியே வேந்தன் செங்குட்டுவன் அறியும் செய்தியாய், இளங்கோவடிகள் ஆயும் செய்தியாய், சாத்தனார் காட்சிச் செய்தியாய் வாய்த்து, **காப்பியத் தொடக்கத் தூண்டுதலாக அமைந்தமை அறிதல் வேண்டும். தமிழகமே அன்றி வடநாட்டவரும், கடல்சூழ் இலங்கைக் கயவாகுவும்** கடவுளாகக் கொண்டதும் இன்றும் அவ்வழிபாடு ஆங்கு உண்மையும் அறிய வாய்ப்பது இக்குன்றக் குரவை மூலம் தொட்டேயாம்.

குன்றவாணர் தொழில், இயற்கை எழில், இயற்கை நுகர்வு, இயற்கைக்கூத்து, அறக்காவல், பிறழா ஒழுக்கம், வழிபாடு என்பனவெல்லாம் உள்ளுறையாய் அமையத் திகழ்வது குன்றக்குரவை.

ஒருபொருள் மேல் **மூன்றடுக்கல்** தாழிசை நிலை! குன்றத்துக் கொடிச்சியர், தமக்கு உண்டாகிய இறும்பூதால் - வியப்பால் - காணரிய காட்சியால் - தம்வயம் இழந்து, **ஒருபொருள்மேல் நான்கடுக்கலாக** ஒரு முறைக்கு இருமுறை பாடுவதாகக் காட்டுகிறார்.

நீராடி வந்த மகளிர், 'அலவுற்று வந்தனர்'! கண்ணகியார் தெய்வக் கோலம் கண்டதும், அயர்வு அகன்றது; மழையோ பொழிந்தது; புதுநீர் கண்ட பூரிப்பால் மீள ஆடினர்; ஆடிய நீரில் இருந்தே, அறத்தொடு நிலை பாடினர்.

நலனுண்டு நல்காதான் குறையை, அவன் நாட்டின்மேல் - மலைமேல் - நீர்ப்பெருக்கின் மேல் காணலாமா? நல்காதானாக அவன் இருப்பினும் நாம் மறப்பேம் அல்லேம்; அவனேயாக - அவன் கொடையேயாக - கொண்டு துய்ப்பேம்; இதனைப் பிறரும் கொண்டு துய்ப்பதுதான் பலரும் ஆடற் இடந்தருவான் பழியை நினைந்து நினைந்து நைய வைக்கின்றது! அடிகள் உருக்கம், கொடியிடையார் உருக்கமாகக் கூடுவிட்டுக் கூடு பாய்கின்றது! நலனுண்டு நல்காதானுக்கு நல்லறம் காட்டுகின்றது.

சேய்க்குக் கண்ணீர்! தாய்க்குச் செந்நீர்!
சேய்க்குத் தும்மல்! தாய்க்கு நூறு!
உன்கண்ணில் நீர்வழிந்தால் என் கண்ணில் உதிரம் கொட்டுதடி -
என்பது தாய்மைப் பிழிவு.

தலைவியின் தோற்றத்தில் - உரையில் - உணவில் - பழக்கத்தில்
ஒரு சிறு மாற்றம்! என்றும் குழந்தையாக எண்ணும் தாய்,
தன் குழந்தைப் பருவத்தை வளர் பருவத்தை ஏனோ மறந்து
போகிறாள்! **வேலன் விளையாட்டு** என நினைக்கிறாள்.

வெறியாடும் வேலனை அழைக்கிறாள். அவனும் வேலன் விளையாட்டு என்றே ஆடுகிறான்!

உண்மை, **"வேலனால் அன்று; வெற்பனால்"** என்றுணர்ந்த தலைவிக்கும் தோழிக்கும் நகைப்பே உண்டாகின்றது! உண்மை உணராமல் உடுக்கடித்துத் தலையாட்டும் கூட்டம் மட்டுமன்று; வெறியாட வந்தானும் மடவன்! இவர்கள் மாறா நேயத்து வள்ளி மகிழ்நனை அழைத்து 'இவன்மேல் ஆடுவான்' என்று எண்ணுவதை எண்ணி, அவனுக்கும் நகைப்பாக இருக்கும்; வள்ளிக்கும் நகைப்பாகவே இருக்கும். ஆதலால் அவன் வாரான்!

ஒருவேளை இவர்கள் எண்ணுவதுபோல் அவன் வெறிக்களம்
வந்து இவன்மேல் ஏறி ஆடினால், இவனிலும் அவன் மடவன்!
என்று கூறும் வகையால் அறத்தை நிலைநாட்டுகின்றனர்.

தெய்வம் பராஅய பகுதியில் சீர்கெழு **செந்தில், செங்கோடு, வெண்குன்று, ஏரகம்** நீங்கா இறைவன் வேலன் என வருவதில் படைவீடுகள் நான்கு பேசப்படுகின்றன.

செந்தில் என்பது ஐயமறத் தெரிந்த திருச்சீரலைவாயே!
அரும்பத உரையார் திருச்செந்தில் என்றே கூறுகிறார்.
செங்கோடு, திருச்செங்கோடு என்கிறார்.
வெண்குன்றம், சுவாமி மலை என்கிறார் ந.மு.வே. நாவலரும் ஏற்கிறார்.
ஏரகம் இன்ன இடம் என அரும்பத உரையால் அறியக்கூடவில்லை.
ஏரகத் துறைதலும் உரியன் என்னும் முருகாற்றுப்படை உரையில் (189) ஆசிரியர் **நச்சினார்க்கினியர்,** "ஏரகம் மலைநாட்டகத்ததொரு திருப்பதி" என்கிறார். துளுநாட்டில் உள்ள **குமரகோட்டம்** என்கிறார் **அரச மாணிக்கனார். வெண்குன்று, ஏரகம், சுவாமிமலை மூன்றும் ஓரிடத்துப் பெயரா? வெவ்வேறா? தனியாய்வு வேண்டும்!** ஆவிநன்குடியும், திருப்பரங்குன்றமும் முருகாற்றுப்படையில் உண்டே! பத்துப்பாட்டில் முருகாற்றுப்படை பிற்பட்டது என்பார்க்கு இஃதொரு களமாகிவிடுமா?
"கோமுறை நீங்கத் தீமுறை செய்தாளை"ப் பாடிப் பயன் என்?
தன்னந்தனிநின்று கோவேந்தன் முன் சென்று அறந்தவறியவன்
ஆருயிர், தானே நீங்கச் செய்தவள், தன்னை வழிபடும் நமக்கு,
அவ்வறம் பிழைக்க விட்டு வைக்க மாட்டாள்! அறம் காப்பாள்!
என்பதாகக் குன்றத்துக் குரவைப்பாட்டை அடிகள் இயைக்கிறார்!
கோமுறை காத்து நிற்கும் குடவர்கோ வாழ்த்துடன் நிறைவிக்கிறார்.

"தலைமகட்குத் தோழி வரைவு கூறியது" என்பது இதன் அகத்துறை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

குறள் - 50

குயில் பாட்டில் மெய்ப்பாடு

பேரா செ.வை.சண்முகம்
மொழியியற்புலம் (ப.நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.
கைபேசி: 98651 96476

1. முன்னுரை : மெய்ப்பாடு பொது

தொல்காப்பியம் செய்யுள் 36 உறுப்புகளில் 20வது உறுப்பாக மெய்ப்பாடு என்பதைச் செய்யுளியலில் குறிப்பிட்டு அதை இரண்டு சூத்திரங்களில் (202-3) விளக்கியுள்ளது. மெய்ப்பாட்டைப் 'பயனே மெய்ப்பாடு எச்சவகையெனா' என்ற வரிசையில் கூறியிருப்பதால் தமிழண்ணல் (1986:151) 'படிக்கும்போது பாட்டின் பொருளை உணர்ந்து படித்து இன்புறுவதையே - இஃது உணர்த்துகிறது என்பதைத் தெளிவுபடுத்துவதாகக்' கருதுகிறார். மேலும் மெய்ப்பாட்டியல் என்ற தனி இயலே செய்யுளியலுக்கு முன் இரண்டாவதாக அமைத்துத் தொல்காப்பியம் விரிவாக விளக்கியுள்ளது. அதில் எட்டு வகை மெய்ப்பாடுகளையும் அவைகளுக்குக் காரணமான உணர்வுகளையும் அவை தொடர்பான வேறு சில கருத்துக்களையும் விளக்கியுள்ளது.

கூடுதலாக உவமவியலிலும் (19) மெய்ப்பாடு பற்றித் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது மெய்ப்பாட்டின் பரிமாணத்தைக் கூட்டுகிறது. 'பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்/ வழி மருங்கு அறியத் தோன்றும் என்ப' என்பதே அந்தச் சூத்திரம். பொதுவாக உவமை என்பது ஒருவரை/ ஒரு பொருளைப் பெருமைப்படுத்த / சிறுமைப்படுத்த ஒத்த பொருளையே பயன்படுத்துவதால் அதில் பேசுவோர் உணர்வு கலந்திருக்கும் என்பதால் ஒருவர் பயன்படுத்தும் உவமைமூலம் அவரின் மெய்ப்பாடு புலனாகும் என்பது கருத்து. கருத்தாடலின் ஒரு உள் கூறு உவமை பயன்பாடு. ஆனாலும் உவமை கருத்தாடலின் கருத்தை விளக்குவதோடு, அது பேசுவோரின் உணர்வையும் கூடுதலாக உணர்த்தப் பயன்படுகிறது என்பது முக்கியமானது.

தொல்காப்பியம் களவியலில் ஒரு பெண் தன் காதல் உணர்வை நேரடியாகச் சொல்லாவிட்டாலும் வருங் காதலனுக்கு உணர்த்தும் முறையை ஒரு உவமை மூலம் விளக்கியுள்ளது மெய்ப்பாட்டு முறையை

விளக்குவது போல் அமைந்துள்ளது. 'தன்னுறு வேட்கை கிழவன் முன்கிளத்தல் / எண்ணுங்காலை கிழத்திக்கு இல்லை / பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப் / பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப' (களவியல். 27) என்ற சூத்திரம் 'புதிய மண் கலத்தில் ஊற்றிய நீர் கசிந்து நீர் உள்ளே இருப்பது வெளியே தெரிவது போல் அவள் காதல் உணர்வு வெளிப்படும்' என்று பொருள்படும். இது கருத்தாடல் மூலம் மெய்ப்பாடு புலப்படுத்தும் முறைபோல் உள்ளது. அதாவது ஒருவருடைய உள்ளத்து உணர்வு அவருடைய மெய்ப்பாட்டின் மூலம் புலனாகிவிடும்.

தொல்காப்பியமே செய்யுளியலில் 'உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருண்மையின் / மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்' (செய்யுள், 196) என்று மெய்ப்பாட்டின் விளக்கமாகக் கொடுத்துள்ளதும் மெய்ப்பாட்டின் பண்பைத் தெளிவுபடுத்துகிறது.

பொதுவாகப் பேசுவோர் பேச்சின் கருத்தின் மொழிப் பொருளோடு குரல் (Voice) மூலமும், அவரின் உணர்வு (கோபம், வருத்தம், மகிழ்ச்சி) ஆகியவை உடல் உறுப்பு அசைவு, முகத்தின் நிலை மூலமும் வெளிப்படும். எனவே குரலும் உடல் உறுப்பு அசைவும், முகத்தின் நிலையும் சேர்ந்தது மெய்ப்பாடு என்பது பொருந்தும். அதாவது பேசுவோர் கூற்றிலே மெய்ப்பாடு கலந்திருக்கும். பேச்சு கருத்தாடல் என்ற முறையில் அது கேட்பவருக்கும் மெய்ப்பாட்டைத் தோற்றுவிக்கும். கேட்பவரின் மெய்ப்பாடு கருத்தாடல் போக்கை ஓரளவு நிர்ணயிக்கும். எனவே கேட்டவர் மெய்ப்பாடும் அமைந்துள்ளதா என்றும் ஆராய வேண்டும். இன்னொரு நிலையில் மறைமுகமாகக் கேட்பவரும் உண்டு. எனவே மறைமுகக் கேட்பவரின் மெய்ப்பாடும் கவனிக்கத் தகுந்தது. எனவே கருத்தாடலாக ஆயும்போது பேசுவோர் மெய்ப்பாடு, நேரடியாகக் கேட்டவர் மெய்ப்பாடு, மறைந்து நின்று கேட்பவர் / காண்பவர் மெய்ப்பாடு என்று மூன்று நிலையில் அமையலாம்.

ஒருவர் முன்னால் நடந்த நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கும்போதும் மனதில் மெய்ப்பாட்டு உணர்வு தோன்றும். சாதாரணமாக ஒரு நிகழ்ச்சியை நினைக்கும்போதெல்லாம் அழுகை அழுகையாக / கோபம் கோபமாக வருகிறது என்பது பேச்சு மொழியில் காணப்படுவதால் அறியலாம். எனவே நிகழ்வுகளின் நினைவிலும் மெய்ப்பாட்டு உணர்வு கலந்திருக்கும்.

குயில்பாட்டில் 'குயில் என்னை எய்துவித்த தாழ்ச்சி யெலாம் / மீட்டு நினைத்தங்கு வீற்றிருக்கும் போழ்தினில்' (210-11) என்றஅடி

நிகழ்வுகள் பற்றிய சிந்தனையும் மெய்ப்பாட்டைத் தோற்றுவித்துள்ளதைக் குறிப்பிடுகிறது.

இலக்கியக் கருத்தாடலில் ஒருவரிடம் நேரடியாகப் பேசிக்கொண்டிருக்கும் போது அந்தக் கருத்து உலகப் பொதுமையானது என்ற முறையில் மேடைப் பேச்சு போலக் கேட்போரைப் பொதுமைப்படுத்தலும் உண்டு. அதுபோலப் பெரிய நூல்களில் ஆசிரியர் கூற்றாக இடைஇடையே அமைந்துள்ளது குறிப்பிடத் தகுந்தது. அப்படியே குயில்பாட்டின் இறுதியில் குயில் தன் முற்பிறப்பைக் கதையைச் சொல்லிமுடித்தவுடனே கவிஞர் கேட்பவர் என்ற முறையில் உணர்வுகளை வெளிப்படுத்தும்போதும் "சாமீ! அவளழகைச் சற்றே தமிழில் இசைத்திடுவேன்' (357) என்று பேசுவது கேட்போர் உலகளாவிய நிலை என்று ஆகிவிடுகிறது.

2. சொற்பொருள்

மெய்ப்பாடு என்ற சொல்லில் உள்ள மெய் என்பது பல பொருள் ஒரு சொல்லான பெயர்ச்சொல் (பாலசுப்பிரமணியன் 2016: 335-6). அது வடிவு, உடல், உறுப்பு, மெய்யெழுத்து, உண்மை, பொருண்மை, இயல்பு என்ற பொருள்களை உடையது. எனவே மெய்ப்பாடு என்பது மெய்ப்படு என்ற வினையடியாகத் தோன்றிய ஆக்கத் தொழில் பெயர். அது பேசுபவரின் உடல் செயல்பாடு காரணமாகக் கருத்தாடல் பொருள் தோன்றுதல் என்ற அர்த்தம் உடையது.

2.1. கருத்து

'மெய்ப்பாடு' என்பது இலக்கியத்தில் வரும்போது மெய்ம்மைப் பாடாகிறது, மனித உணர்வு அருவம்; அது பருப்பொருட்டாகித் தர இலக்கியம் முயலுகிறது... அந்த அருவ உணர்வு மெய்ப்பட - உருப்பட - மெய்ம்மைப்படத் தோன்றிப் படிப்பவருக்குச் சென்று சேர உதவுதலால் இலக்கியத்தில் மெய்ப்பாடு எனப்பட்டது' தமிழண்ணல் விளக்கம் (மேலது, ப.53) சிறப்பானது. உண்மையில் இலக்கியத்தில் ஓரளவு மொழி நடையும், சொற்களும் மெய்ப்பாட்டை வருணித்துப் பருப்பொருளாக உணர்வு புலப்படுத்தப்படுகிறது.

மெய்ப்பாடு சுவை என்றும் குறிப்பிடப்படுகிறது. அது நாக்கின் உணர்வைக் குறிக்காது, உள்ளத்து உணர்வைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். அதற்கேற்பவே அதன் பெயர்கள் அழுகை, பெருமிதம் என்று அமைந்துள்ளன. ஆனால் எழுத்து இலக்கியத்தில் மெய்ப்பாட்டுக்கு உரிய சொற்களை அடையாளம் கண்டு மெய்ப்பாட்டு

வகையையும் அதற்கு உரிய காரணியையும் வாசகர் கண்டறிய வேண்டும். மெய்ப்பாட்டுக்குக் கருத்தாடல் சூழலும், கூற்றும் அவைகளை ஒட்டிய கவிஞனின் கூற்றும் முக்கியமானவை.

இலக்கியக் கருத்தாடலில் பயன்படுத்தும் சொற்களும் சிறப்பாக அடைச்சொற்களும் மெய்ப்பாட்டின் அடையாளமாக அமையும். உதாரணமாகக் குயில் பாட்டில் 'கண்டேன், வெகுண்டேன், கலக்க முற்றேன், நெஞ்சில் அனல் / கொண்டேன் குமைந்தேன், குமுறினேன், மெய் வியர்த்தேன்' (150) என்பவை கேட்டோரின் மெய்ப்பாட்டைச் சொற்களே புலப்படுத்துகின்றன.

ஒரு பொருளை வருணிக்கும்போது அங்குள்ள அடைகளும் ஒரு வகையில் மெய்ப்பாட்டைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளன. குயில்பாட்டில் பொய்ப் பறவை (151) என்ற தொடரில் உள்ள கோபம் (வெகுளி) மெய்ப்பாட்டின் வெளிப்பாடே. செத்தைக்குயில் (197), சொற்றைக் குரங்கு (205), 'பொய்ப்பாட்டை (180), பொய்மைக்குயில் (209), பொய்க்குயில் (212, 216) என்ற தொடர்களும் அதை உறுதிசெய்கின்றன. மாறாக 'நேச உரை' (179) என்பது அன்பின் அல்லது உவகையின் மெய்ப்பாடாகக் கொள்ளலாம்.

2.3. மெய்ப்பாட்டு வகை

தொல்காப்பியம் மெய்ப்பாடு எட்டு என்று கூறி அவைகளுக்கான காரணிகளையும் விளக்கியுள்ளது (மெய்ப்பாட்டியல், 3-11) அவையாவன:

மெய்ப்பாடு	காரணி
1. நகை (சிரிப்பு)	எள்ளல், இளமை, பேதமை, மடம் (ஒன்றை வேறொன்றாகத் திரித்துக் கொள்வது)
2. அழுகை (அவலம்)	இழிவு (இழிவுபடுத்துவது) இழவு (இழப்பது), அசைவு (தளர்ச்சி), வறுமை
3. இளிவரல் (இகழ்ச்சி)	மூப்பு, பிணி, வருத்தம், மென்மை (ஏழ்மை)
4. மருட்கை (வியப்பு)	புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் (ஒன்றன் வளர்ச்சி)
5. அச்சம்	அணங்கு (தெய்வம்), விலங்கு, கள்வர், இறை (பெரியோர்)
6. பெருமிதம்	கல்வி, தறுகண் (வீரம்), புகழ், கொடை
7. வெகுளி (கோபம்)	உறுப்பறை (உறுப்புகளை அறுத்தல்), குடிகோள்

(குடிமக்களைத் துன்புறுத்தல்), அலைத்தல் (துன்பப்படுத்தல்), கொலை

8. உவகை (மகிழ்ச்சி) செல்வம், புலன் (அறிவுடைமை), புணர்வு (காதல்), விளையாட்டு

மெய்ப்பாடு என்பது வடமொழியில் ரசம், மேலைநாட்டார் உரு (imagery) என்பதற்கும் இணையானது என்று தமிழண்ணல் (மேலது, ப.13) குறிப்பிட்டுள்ளார்.

'சுவைத்தல், ரசித்தல் என்ற பொருள் குறிப்புடைய 'ரஸ்' என்ற வேர்ச்சொல்லிருந்து பல் பொருண்மை கொண்ட ரசம் என்ற சொல் உருவாகியிருக்க வேண்டும். தோன்றுதல், காணுதல், புரிதல், அறிதல், விரும்புதல் என்றும் இவ் வேர்ச்சொல்லிற்குப் பொருட் பரிமாணம் உண்டு' என்ற அய்யப்பணிக்கரின் (2012:21) ரசம் பற்றிய விளக்கம் அறியத்தகுந்தது.

மெய்ப்பாடு மேலைநாட்டார் உரு (imagery) என்பதற்கும் இணையானது என்ற கருத்து விளக்கத்துக்கு உரியது. பூரணச்சந்திரன் (2008) உரு (imagery) பற்றித் தரும் விளக்கமாவது:

'கவிஞர் சொற்களால் வருணிக்கின்ற ஒரு காட்சி வாசகர் உள்ளத்தில் தெளிவான காட்சியாக உருப்பெறுவது படிவம்' (ப.83). 'அது அடிப்படையில் சொல்ல வந்த காட்சிப்படுத்திக் கூறுவதுதான். கண்ணால் காணமுடியாத அருவப் பொருள்களையும், கருத்துகளையும் காட்சிப்படுத்த வல்லது படிமம்' (ப.85) இதன்படி மெய்ப்பாட்டின் அடுத்த உயரிய நிலை படிமம் என்று ஆகிறது. எனவே மெய்ப்பாட்டை உருவாகக் கொண்டது பொருந்தாது.

சிறு கவிதையில் கூட ஒன்றுக்கு மேற்பட்ட மெய்ப்பாடு இணைந்து அமைவதைக் காணமுடிவதால் (சண்முகம், 2013:219) பெரிய கருத்தாடலிலும் அந்த நிலை அமையும்.

3. குயில்பாட்டு கதை மாந்தர்

சுப்பிரமணிய பாரதியாரின் (1882-1921) குயில்பாட்டு 1915ஆம் ஆண்டு எழுதப்பட்டதாகக் கருதப்பட்டாலும் 1923ஆம் ஆண்டே அச்சில் வெளிவந்துள்ளது அவர் தந்த தலைப்பு குயில் என்பதே.

குயில்பாட்டில் குயில், குரங்கு, முனிவர், சேர மன்னன், மாடன், நெட்டைக் குரங்கன், கவிஞர் ஆகியோர், பேசுவோராகவும், நேரடிக் கேட்பவராகவும் மறைமுகக் கேட்பவராகக் கவிஞர், மாடன், நெட்டைக்

குரங்கன் ஆகியோரும் அமைந்து மெய்ப்பாடு வெளிப்படுத்துகிறார்கள். மேலும் ஒருவரை / ஒன்றைப் பார்த்ததும், அதாவது பார்ப்பவரின் காட்சி வழியாகவும் மற்றவருக்கு மெய்ப்பாடு தோன்றுவது அமைந்துள்ளது. குயில்பாட்டில் கவிஞரே ஒரு கதைமாந்தராக அமைந்துள்ளதால் 'கண்டார்' என்ற முறையிலும் மெய்ப்பாடு அமைந்துள்ளது. 'கண்ணாலே நான்கண்ட காட்சிதனை என்னுரைப்பேன்' (83) என்று அவருடைய எதிர்வினையின் மெய்ப்பாடு விளக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தகுந்தது.

ஒருவர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைப் பின்னர் நினைத்துப் பார்க்கும்போது உள்ளுக்குள் மெய்ப்பாட்டு உணர்வு தோன்றும். அதன்படி முதல் நாள் தன்னைக் காதலிப்பதாகக் கூறிய குயில் இரண்டாம் நாள் குயில் குரங்கைச் சந்தித்துக் காதலிப்பதாகச் சொன்னதை நேரில் பார்த்ததும் 'மெய்யெல்லாம் சோர்வு விழியில் மயக்கமுற / உய்யும் வழி உணராது உள்ளம் பதைபதைக்க / நாணும் துயரு நலிவுறுத்த நான் மீண்டு / பேணு மனைவந்தேன் பிரக்கினைகள் போய் வீழ்ந்துவிட்டேன்' (123-4) என்பது காட்சிவழித் தோன்றிய வருத்தம் என்ற காரணியால் தோன்றும் இளிவரல் மெய்ப்பாடு ஆகும்.

'பண்டு நடந்ததனைப் பாடுகின்ற இப்பொழுதும் மண்டுதுயர் எனது மார்பை யெலாம் கவ்வுவதே' (132) என்னும் போது 'துயர்.. கவ்வுதல்' என்பது நினைவு அடிப்படையில் இழிவு (இழத்தல்) காரணியால் தோன்றும் அழுகை (அவலம்) மெய்ப்பாடு ஆகும். அது போலக் குயில், மாட்டைக் காதலிப்பதாகக் கூறியதை நேரில் பார்த்துவிட்டு 'எண்ணியெண்ணிப் பார்த்தேன் எதுவும் விளங்கவில்லை' (201) என்று கூறி தோன்றிய மன உணர்வுகளுடன் (202-7) மெய்ப்பாடுகளும் கருதத் தகுந்தவையே (விளக்கம் பின் பகுதியில்). மறுநாள் காலையில் எழுந்ததும் தோன்றிய நினைவுகள் 'குயில் என்னை எய்துவித்த தாழ்ச்சியெலாம் / மீட்டு நினைத்தங்கு வீற்றிருக்கும் போழ்தினிலே' (210) என்று விளக்கப்பட்டிருப்பது இழிவு காரணியாகத் தோன்றும் அழுகை மெய்ப்பாடு என்று கருதலாம்.

இந்த அடிப்படையில் குயில்பாட்டு மெய்ப்பாடு i. கருத்தாடல் நோக்கு ii. உவமை நோக்கு என்ற இரண்டு வகையில் ஆராயப்படுகிறது. கருத்தாடலில் உவமை ஒரு கூறாக இருந்தாலும் அதைத் தனியே ஆராய்வது இலக்கிய நோக்கில் சிறப்பாக அமையும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

தமிழர் கண்ட முழுமுதற் கடவுள்

பேரா **ப.மருதநாயகம்**
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113
கைபேசி: 94427 87727

சென்ற இதழின் தொடர்ச்சி

அரியுமல்ல அரனுமல்ல அப்புறத்தில் அப்புறம்
கருமை செம்மை வெண்மையைக் கடந்து நின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்
துரியமும் கடந்து நின்ற தூர தூர தூரமே.

என்று விளக்குவார். இப்பாடலின் இறுதியடியை எல்லிஸ் "Beyond every state of corporeal being it is farther, farther and farther still" என்று மொழிபெயர்ப்பது அவ்வடியின் சொல்லாட்சியையும் கருத்தாழத்தையும் புலப்படுத்தும். உருவிலா வழிபாட்டின் இன்றியமையாமையைச் சிவவாக்கியர் வற்புறுத்தும் பாடல்களும் சிறப்பானவை.

நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றி வந்து முணமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?

கட்டையாற் செய்தேவரும் கல்லினாற் செய்தேவரும்
மட்டையாற் செய்தேவரும் மஞ்சளால் செய்தேவரும்
சட்டையால் செய்தேவரும் சாணியால் செய்தேவரும்
வெட்ட வெளியதன்றி மற்ற வேறு தெய்வம் இல்லையே.

கோயிலில் இறைவனைக் காண முயலும் குருட்டுப்பத்தியை,

கோயிலா வதேதடா குளங்களா வதேதடா
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் உம்மனத்துளே குளங்கள் உம்மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லை யில்லை யில்லையே

அண்டர்கோன் இருப்பிடம் அறிந்துணர்ந்த ஞானிகள்
கண்ட கோயில்கள் தெய்வமென்று கையெடுப்பதில்லையே

என்றெல்லாம் கண்டிப்பார்.

சமயச்சார்பு உடையவர்களின் மூடநம்பிக்கைகளையும் முடிவில்லாச் சடங்குகளையும் எள்ளி நகையாடுவார்.

இருக்கு நாலுவேதமும் எழுத்தை யற வோதினும்
பெருக்க நீறு பூசினும் பிதற்றினும் பிரான் இரான்
உருக்கி நெஞ்சை உட்கலந்து இங்கு உண்மை கூற வல்லிரேல்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்து கூடலாகுமே.

"கடவுள் வாழ்த்து" அதிகாரத்தில்வரும் குறள்களை விளக்கும் எல்லிஸ் திருவாய்மொழி, திருவாசகம், சிவவாக்கியம் ஆகியவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டி அவற்றிற்குள்ள வேறுபாடுகளைத் தொட்டுக்காட்டுகிறார். திருவாய் மொழியிலிருந்து,

நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடும் வானாய்ச்
சீரார் சுடர்களிரண்டாய் சிவனாய் அயனாய்க்
கூரார் ஆழி வெண்சங்கேந்திக் கொடியேன் பால்
வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே *(30)*

உயர்வற வுயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழல் மனனே. *(31)*

எனும் பாடல்களை ஆங்கில மொழிபெயர்ப்போடு தந்து, திருவாய்மொழி வைணவ தத்துவமான வசிட்டாத்வைதக் கோட்பாடுகளுக்கு மூலநூல் என்றும், திருவாசகத்தில் வரும்

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே

"உரை யுணர்விறந்து நின்றதோர் உணர்வே"
"இணங்கிய எல்லா உயிர்கட்கும் உயிரே"

"இறைவனே நீ என்னுடலிடங் கொண்டாய்"
"நிரந்த ஆகாய நீர் நிலம் தீ கால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே" (32-33)

போன்ற அடிகளில் அத்துவைதத் தத்துவம் பொதிந்து கிடப்பதையும் குறிப்பிட்டு விசிட்டாத்துவைதமும் அத்துவைதமும் வேறுபட்ட தத்துவங்களாயினும் அவற்றைச் சார்ந்த மக்களின் நம்பிக்கையும் ஒழுகலாறும் தென்னகத்தில் ஒரு தன்மையதே என்பார்.

திருக்குறளின் "அன்புடைமை" பற்றிய விளக்கத்தில் திருமூலரின்

அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. (313)

என்னும் பாடல் இடம்பெறும்.

"அகரமுதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு" என்னும் முதற்குறளை

As ranked in every alphabet the first
The self same vowel stands, so in all worlds,
The Eternal God

என்று மொழிபெயர்க்கும் எல்லிஸ் அதற்குத்தரும் கீழ்க்கண்ட விளக்கம் திருவள்ளுவர் முழுமுதற் கடவுளையே குறிக்கின்றார் என்பதைத் தெளிவுபடுத்தும்:

The first of our vowels, when pronounced short, is here intended which is actually the first letter in all alphabets, and the meaning of the distich, therefore, is that, as this letter, however varying in form, is the first in all alphabets, so the same deity, however varying in his energies and attributes, governs all nature.

எல்லா மொழிகளிலும் உள்ள உயிரொலிகளில் முதலானது குறிலாக ஒலிக்கப்பெறும் அகரமே. அதுவே எல்லா மொழி எழுத்துக்களிலும் முதலானதாகும். எனவே இக்குறளின் பொருள்: இவ்வெழுத்து வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு வடிவங்கள் கொண்டாலும் அதுவே முதல் எழுத்தாக இடம் பெறுவதைப் போன்று பல சமயங்கள் கூறும் தெய்வங்கள் பண்புகளிலும்

ஆற்றல்களிலும் வேறுபட்டாலும் இயற்கை முழுவதையும் ஆளும் தெய்வம் ஒன்றே.

கடவுள் வாழ்த்துப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து விளக்கம் தரும் எல்லிஸ் அவற்றின் உட்கிடக்கை, யாவும் கடந்த முழுமுதற் கடவுளே என்றும் சைவ, வைணவ, புத்த, சமண சமயங்களும் பிறவும் விதந்து கூறும் ஏதோவொரு சிறு தெய்வம் அன்று என்றும் வற்புறுத்திக் கூறுவார். முதற்குறளில் உள்ள "ஆதிபகவன்" என்னும் தொடரை "the eternal God" ("என்றும் நிலைத்துள்ள இறைவன்") என்று மொழிபெயர்க்கும் எல்லிஸ் ஏனைய குறள்களில் கடவுளைச் சுட்டப் பயன்படுத்தப்பெறும் சொற்களும் தொடர்களும் இதே பொருள் கொண்டவை என்பார். "வாலறிவன்" எனும் தொடரைத் தூய அறிவு ("pure intelligence") என்று மொழி பெயர்ப்பார்.

"பொறிவாயில் ஐந்தவித்தான்" என்னும் தொடரை "one who is void of sensual organs" (பொறிகள் அற்றவன்) என்று மொழி பெயர்த்துக் கீழ்க்காணும் விளக்கம் தருவார்:

> God, being purely spiritual, is void of those organs but is to be contemplated as being all eye, all ear etc., as he possesses the eneygy of any sense innately, not derived, as in material beings, from the excitation of the corporeal organ.

(இறைவன் முற்றும் உருவமற்ற அருவமானதால் அவனுக்குப் பொறிகள் ஏதும் இல்லை. ஆனால் அவனை முற்றும் கண்ணாகவும், காதாகவும், பிற பொறிகளாகவும் எண்ணி நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் அவன் ஒவ்வொரு பொறியின் ஆற்றலையும் உள்ளார்ந்த நிலையில் பெற்றுள்ளான்; உலகத்து உயிர்களைப் போல் உடல் உறுப்புக்கள் மூலம் புலன்களைப் பெறுதல் அவனுக்கு இல்லை.)

வள்ளுவர் கண்ட கடவுளை அடையாளம் காட்டும் எல்லிஸ் இன்னொரு குறளுக்குத் தரும் விளக்கமும் நோக்குதற்குரியது.

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

என்னும் குறளை,

The anxious mind, against corroding thought,
No refuge hath, save at the sacred feet
Of him to whom no likeness is.

என்று மொழி பெயர்த்துத் தருவதோடு இக்குறளுக்கான பெஸ்கியின்

இலத்தீன் மொழிபெயர்ப்பு எவ்வாறு குறையுடையது என்பதையும் சுட்டிக்காட்டுவார். வள்ளுவரின் கூற்றுப்படி, 'தனக்குவமை இல்லாதான்' என்னும் தொடர் இறைவனுக்கு உவமையாகச் சொல்லக்கூடிய வேறு பொருள் இல்லை என்றும், இறைவனை ஒத்த பேராற்றல் வேறு ஒன்றும் இல்லையென்றும் பொருள்படும். ஆனால் பெஸ்கியின் இலத்தீன் மொழிபெயர்ப்பு இவ்விரண்டில் ஒன்றையே குறிக்குமாறு அமைந்துள்ளது.

> The Latin commentary renders the original 'qui sibi similem non habet" but as 'உவமை' is an abstract noun it ought to be 'qui sibi similitudinem non habet ' The author says, not merely that there is no similitude by which he can be described, but that there is no figure of human speech by which his nature can be expressed.

7

தமிழ்ச்சித்தர்கள் என்று கருதப்பெறும் யாவரும் இறைவன் ஒருவனே என்ற கோட்பாட்டினர்; சமயச் சடங்குகளுக்கு எதிராகவும் சாதிப்பாகுபாட்டிற்கு எதிராகவும் போர்க்கொடி உயர்த்தியவர். தாயுமானவரும் இராமலிங்க அடிகளும் இம்மரபைச் சேர்ந்தவராக எண்ணுதற்குரியர். பாரதியும் தன்னை ஒரு சித்தனாகவே கருதினார். இவர்களுக்கெல்லாம் திருமூலரே முன்னோடியாக அமைந்தார். திருமந்திரம் மனித இனத்தின் ஒருமை பற்றியும் முழுமுதற் கடவுள் பற்றியும் சொல்லியுள்ள கருத்துக்கள் அரியவை. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்," "அன்பே சிவம்" என்பவற்றோடு இறைவனைப் பற்றி அவர்தரும் வேறு எண்ணங்களும் உயர்ந்தவை.

இறைவன் இவ்வண்டத்தையும், ஊழிகளையும், ஐம்பூதங்களையும், எண்ணற்ற உயிர்களையும் எல்லையற்ற அன்பினால் மகிழ்வோடு படைத்தான் என்பார்.

உகந்து நின்றே படைத்தான் உலகேழும்
உகந்து நின்றே படைத்தான் பலஊழி
உகந்து நின்றே படைத்தான் ஐந்து பூதம்
உகந்து நின்றே உயிர்ஊன் படைத்தானே.

உடலைக் குறைகூறி இகழ்ந்துபேசும் பலசமயத்தார்க்கும் உலகத்தத்துவ விற்பன்னர்களுக்கும் அறிவுரை கூறும் வகையில் உடலே இறைவன் குடிகொள்ளும் கோயில் என்பார்.

உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே. (725)

மலமென்று உடம்பை மதியாத ஊமர்
தலமென்று வேறு தரித்தமை கண்டீர் (2137)

அறுவகைச் சமயத்தாரும் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொள்வது மூடத்தனம் ஆகும். குன்றின் அருகிருந்து குரைக்கும் நாய் குன்றிலிருந்து வரும் எதிரொலியைக் கேட்டு மீண்டும் குரைத்தலை ஒத்தது அவர்களுடைய செயல். ஒரு பேரூருக்கு ஆறு வழிகள் இருத்தல்போல, ஆறு சமயங்களும் ஓர் இறைவனை நோக்கி அழைத்துச் செல்பவையே.

ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள்
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுஉரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாய் ஒத்தார்களே. (1558)

எங்கள் தவம், நம்பிக்கை இதுவே, அதுவே என்றெல்லாம் பேசுவோர் பித்தர்களே. எத்தவத்தாராயினும், எங்கு பிறந்தாராயினும் இறைவனை உள்ளுணர்வால் தெளிந்து அவனை அடைய முயல்வார் உறுதியாக அவனை அடைவர்.

இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்
பித்தரைக் காணின் நகும்எங்கள் பேர்நந்தி
எத்தவம் ஆகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர்வார்க் கொல்லைஊர் புகலாமே. (1568)

அரனே இறைவன், அரியே இறைவன், அல்லாவே இறைவன், ஏசுவின் தந்தையே இறைவன், ஜெஹோவாவே இறைவன், அவனே வீடுபேறு அளிக்க வல்லவன் என்றெல்லாம் கூறுவார்க்குத் தக்க விடைதருகிறார் திருமூலர்.

உள்ளத்தில் ஒன்றியிருக்கும் இறைவனை எட்டுத்திக்குகளிலும் தேடி அலைவது மடமையென்பார்.

அன்று நின்றான் கிடந்தான் அவன் என்று
சென்றுநின்று எண்டிசை ஏத்துவர் தேவர்கள்
என்று நின்று ஏத்துவன் எம்பெருமான் தன்னை
ஒன்றியென் உள்ளத்தில் உள்ளிருந் தானே. (1762)

மனிதவுடம்பே ஆலயம் என்ற கருத்தைத் திருமூலர் உறுதியாகச் சொல்வார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே. (1823)

கர்நாடகத்து வீரசைவ சமயத் தலைவரான பசவண்ணர் இக்கருத்தைத் தமது வசனத்தில் இவ்வாறே சொல்லுவார்.

மனிதவுடம்பல்லாது இறைவனுக்கும் வேறு இல்லம் இல்லையென்று திருமூலர் துணிந்து கூறுவது வியப்புக்குரியது.

இவனில்ல மல்லது அவனுக்கு அங்கில்லை
அவனுக்கும் வேறில்லம் உண்டா அறியின்
அவனுக்கு அவனில்லம் என்றென்று அறிந்தும்
அவனைப் புறம்பென்று அரற்றுகின் றாரே. (2650)

உள்ளத்தே ஒளியாய்த் திகழும் இறைவனுக்கு உருவம் இல்லை. அவன் ஆணோ, பெண்ணோ, பேடோ அல்லன். அறிவுமுதிர்ந்தோரே அவன் பெருமையை அறிவர்.

பெண்ணல்ல ஆணல்ல பேடல்ல மூடத்துள்
உள்நின்ற சோதி ஒருவர்க்கு அறியொணாக்
கண்ணின்றிக் காணும் செவியின்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே. (1872)

மாந்தன் - இறைவன் உறவுபற்றி மேலும் புரட்சியான கருத்தையும் திருமூலர் வெளியிடுவார்:

சீவன் என்னச்சிவன் என்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறி கிலர்
சீவனார் சிவனாரை அறிந்த பின்
சீவனார் சிவனாய் இட்டிருப் பாரே. (2017)

சங்கரர் அத்வைதக் கோட்பாட்டை விளக்கக் கயிற்றரவு உருவகத்தைப் பயன்படுத்துவார். இது தமிழ்ப்பழமொழி ஒன்றிலிருந்து பெறப்பட்டது. திருமூலர் தரும் பல உருவகங்களையும் சங்கரர் அறிந்திருக்க வேண்டும். இறைவன் காற்றில் உணர்வாகவும், கரும்பில் இனிப்பாகவும், பாலில் வெண்மையாகவும், மலரில் மணமாகவும், கனியில் சாறாகவும் ஊடுருவிப் பரவியிருக்கிறான் என்று ஒரு பாடல் (2639) கூறும். கயிறென்று மிதிக்கவும் முடியவில்லை, அரவென்று

தாண்டவும் முடியவில்லை என்பதையொத்த வேறு இரண்டு உருவகங்களைத் திருமூலர் தருகிறார்.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னில் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன் கரணங்களாம்
தன்னின் மறைந்தது தன் கரணங்களே. *(2289)*

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே *(2290)*

களிமண்ணால் செய்யப்பட்ட பொருள்கள் பலவாயினும், களிமண் ஒன்றே. இறைவனின் படைப்புகள் பலவாயினும் அவற்றுள் பரவியிருக்கும் இறைவன் ஒருவனே. கண் பல பொருள்களைப் பார்க்கக் கூடுமாயினும் தன்னைக் காண அதனால் இயலாது. இறைவன் எங்குமிருப்பினும் சீவனால் அவனைக் காண்டல் எளிதன்று.

மண்ணொன்று தான்பல நற்கலன் ஆயிடும்;
உண்ணின்ற யோனி கட்கெல்லாம் ஒருவனே;
கண்ணொன்று தான்பல காணும் தனைக்காணா;
அண்ணலும் அவ்வண்ணம் ஆகி நின்றானே. *(2351)*

ஒன்றாகிய இறைவனை அடைதற்கு மாந்தன் மேற்கொள்ள வேண்டிய முயற்சி எத்தகையதாக இருக்கவேண்டுமென்பதையும் திருமூலர் குறிப்பிடுவார்:

வானின்று இடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்று செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானொன்றி மாருதம் சண்டம் அடிக்கிலென்
நானொன்றி நாதனை நாடுவன் நானே. *(2850)*

திருமூலரிடமிருந்து ஆதிசங்கரர் பெற்ற இன்னொரு உருவகமும் குறிப்பிடத்தக்கது.

கடம்கடம் தோறும் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்

விடம்கொண்ட கண்டனும் மேவிய காயத்து
அடங்கிட நின்றது அப்பரிசு ஆமே. *(2002)*

(தண்ணீர் நிரம்பியுள்ள குடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கதிரவன் தெரிவதைப் பார்க்கிறோம். இவ்வாறு தெரிகிற ஞாயிறு தண்ணீர்க் குடத்துள் மட்டும் இல்லை; வெளியிலும் ஒளிவீசித் திகழ்கிறது. இந்தக் குடத்துக்குள் தெரிகிற ஞாயிற்றை ஒரு தட்டைப்போட்டு மூடினால் அத்தட்டு அதனை மறைத்துவிடாது. வேறு குடத்திலும் வெளியிலும் அது தெரியத்தான் செய்யும். விடம் உண்ட நீலகண்டப் பெருமான் உடம்பில் பொருந்தி அதனுள்ளாக அடங்கியிருப்பது, குடத்துக் கதிரவனை ஒத்தது. பல உயிர்களின் உடல்களில் இறைவன் கலந்திருந்தாலும் அவற்றில் அடங்கி விடாது அவற்றைக் கடந்து நிற்கிறான்.)

,இதனை உபதேச சாஹஸ்ரி என்னும் நூலில் மூன்று பாடல்களில் சங்கரர் சொல்லக் காணலாம்.

ஆன்மா ஒன்றானாலும் தண்ணீரில் காணப்படும் கதிரவனின் பிரதிபலிப்புகளைப் போல் பலவாகத் தோன்றுகிறது. (27) ஆன்மா ஒன்றானாலும் தண்ணீரில் காணப்படும் திங்களின் பிரதிபலிப்புகளைப் போல் பலவாகத் தோன்றுகிறது. (28) தண்ணீரில் திங்களின் பிரதிபலிப்புகளைப் போல், ஆன்மா எங்கும் தோன்றுவதாயினும் அறிவில் பார்க்கப்படுகிறது. (34)

8

சைவசமயச் சார்புடைய நாயன்மார்களும் வைணவச் சார்புடைய ஆழ்வார்களும் முறையே சிவனே தெய்வம் என்றும் திருமாலே தெய்வம் என்றும் வாழ்த்திப் பலநூறு பாடல்கள் இயற்றினாரானாலும் முழுமுதற்கடவுள் ஒருவனே யென்பதையும் அவன் யாவும் கடந்தவன் என்பதையும் தாமும் உணர்ந்தும் பிறர்க்கும் அறிவிக்கத் தவறினார் இலர்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.
குறள் - 63

இறந்தகாலம் - ஒரு புதிய பார்வை

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
செம்மொழித் தமிழாய்வு
மத்திய நிறுவனம், சென்னை.
கைபேசி: 9443151044

பகுதி - 1

1.1. இறந்தகால வினைத்திரிபின் அடிப்படையில் தமிழ் வினைகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். குற்றுகரவீற்று வினைப்பகுதிகள் ஒரு பிரிவினவாகும். இந்தப் பிரிவின் கீழ் இனங்காணப்படும் வினைப்பகுதிகள் **இ, இய், இன்** ஆகியவற்றை இறந்தகால விகுதிகளாக ஏற்கும். எ-டு: வினைப்பகுதி: பழகு, பாடு, அஃகு, பழக்கு, தோண்டு, மூழ்கு. கருதுக: **பாடி, பாடிய, இயற்றியான்** (குறள்.1062), **இயற்றியோன், பாடின, பாடினான். இ, இய்** இரண்டும் சார்ந்துருபுகளாகும். இதேபோல் **இன், இய்** இரண்டும் சார்ந்துருபு களாகும். **பாடிய, பாடின** வினைகளில் **இய், இன்** இரண்டும் இலக்கிய மொழியில் உறழ்ச்சி வழக்கில் (Free Variation) நிகழ்ந்தாலும் முன்னது இலக்கிய வழக்கிலும் பின்னது பேச்சு வழக்கிலும் நிகழ்வதே பெரும்பான்மையாகும். இந்தப் பிரிவில் நிகழும் வினைப்பகுதிகள் உயிர் வினைகளாகக் கொள்ளப்படும்.[1]

1.2 தமிழ், தெலுங்கு இரண்டிலும் இறந்தகால வினைகளில் **இன்** என்பது கால விகுதியாக நிகழ்கிறது. இந்த விகுதியில் நிகழும் னகரக் கிளவி -**இன்**- என்பதன் ஒருங்கிணைந்த உறுப்பாகக் கொள்ளத்தக்கதா என்பது விவாதத்துக்குரிய ஒன்றாகவே இருந்து வருகிறது. கால்டுவெல் (1961: 503, 504), சுப்ரமண்யம் (1971: 226, 227) இருவரும் இந்த உறுப்பினை -**இன்**- என்பதன் ஒருங்கிணைந்த ஒன்றாகக் கருதவில்லை. இருவரும் இந்த னகரக் கிளவியைத் தனி இறந்த கால விகுதியாகக் கருதினாலும் அதற்கான வலுவான சான்றுகளை அவர்கள் அளிக்கவில்லை.

1.3 கன்னடத்தில் **ஆடிதனு** 'ஆடினான்' என்பதில் நிகழும் -**இத்**- (-id-) என்ற கால விகுதியில் நிகழும் தகரக் கிளவியைப் போன்றதாகும். -**இன்**- என்பதில் நிகழும் னகரக் கிளவி என்று கால்டுவெல், சுப்ரமண்யம் இருவரும் கருதுகின்றனர். **ஆடிதனு** என்பதில் **ஆடிது** என்பது இறந்தகாலப் பகுதியாகும். ஆனால் **ஆடினான்** என்பதில் **ஆடின்** என்பது

இறந்தகாலப் பகுதியாக நிகழவில்லை. இதனின்றும் **-இன்-** என்பதில் னகரக் கிளவி அதன் ஒருங்கிணைந்த உறுப்பு அன்று என்று கருதத் தோன்றுகிறது. **ஆடிது** என்பதை ***ஆடின்று** › **ஆடிந்து** › **ஆடிது** என்ற முறையில் வருவிப்பதில் உள்ள தடை என்ன? தடையேதும் உள்ளதாக நாம் கருதவில்லை. **அன்** சாரியை இறந்தகால வினைகளில் மட்டுமே நிகழ்வதால் (எ-டு. **செய்தனன், செய்தனள், செய்தனர், செய்தன்று, செய்தன** வாய்பாட்டு வினைகள்). அவற்றில் நிகழும் னகரத்தை இறந்தகால விகுதியாகக் கருதுவார் சுப்ரமண்யம். இந்தக் கருதுகோள் வலுவற்ற ஒன்றாகும். இறவாக்கால வினைமுற்றுக்களிலும் **அன்** சாரியையின் நிகழ்ச்சி தமிழில் காணப்படுகிறது. கருதுக: **வருவனள்** (நற்.339.6), **வருவன** (மதுரைக். 394, 542). **செய்வன, ஆடுவன** வாய்பாட்டு வினைகளின் நிகழ்ச்சியினை இன்றைய தமிழிலும் காணலாம்.

1.4 புணர்ச்சியில் வருமொழிமுதல் வல்லொற்றாக இருந்தால் இகரவீற்று வினையெச்சத் தொடர்களில் வல்லொற்று மிகுதியைக் காணலாம். எ-டு. **கூடிக்கலைந்தனர், ஆடிப்பழகு, தேடிச்செல், சூடித்தருக.** இந்தத் தொடர்களில் நிகழும் வல்லொற்று மிகுதியானது மகரத்தின் திரிபாகக் கருதத்தக்கதாகும். இதனைச் சான்றாகக் கொண்டு ***கூடிம், *ஆடிம், *தேடிம், *சூடிம்** என்று இகரவீற்று வினையெச்சங்களை மகரவீற்றினவாக மீட்டுருவாக்கலாம். மகரவீற்றுப் பெயர்கள் பழந்தமிழிலும் தெலுங்கிலும் னகர வீற்றினவாகத் திரிந்து வழங்கும். (எ-டு. **மரம்/மரன், ம்ரானு** (தெ.), **அறம்/அறன், புலம்/புலன், வளம்/வளன், இடம்/இடன்.** இதனைக் கருத்தில் கொண்டு ***கூடிம், *ஆடிம், *தேடிம், *சூடிம்** ஆகிய வினைகள் ***கூடின், *ஆடின், *தேடின், *சூடின்** எனத் திரிந்தனவாகக் கருதலாம். இந்தக் கருதுகோளின் அடிப்படையில் **-இன்-** என்ற இறந்தகால விகுதியில் நிகழும் னகரக் கிளவியை விகுதியின் ஒருங்கிணைந்த உறுப்பாகக் கருதமுடியாது. ஆயினும் இங்கே மேற்கொள்ளப்பட்டுள்ள இறந்தகாலம் தொடர்பான ஆய்வில் **-இன்-** என்பதை ஓர் முழுமையான இறந்தகால விகுதியாகவே கொள்ளப்படுகிறது.[2]

1.5 இரண்டாவது பெரும் பிரிவில் தகரக் கிளவி இறந்தகால விகுதியாக நிகழும். இந்த விகுதியானது நகரக் கிளவியைத் தொடர்ந்தும் (எ-டு. **காய்-ந்து, அறி-ந்து**), தகரக் கிளவியைத் தொடர்ந்தும் (எ-டு. **காய்-த்து, பறி-த்து**) இவை தொடராமலும் (எ-டு. **செய்-து, பெய்-து, கொய்-து, நெய்-து, வய்-து** (=வை-து), **உழு-து, தொழு-து, அழு-து, பொரு-து**)

நிகழும். இந்தப் பிரிவில் நிகழும் வினைகள் மெய்வினைகள் எனக் கருதத்தக்கவையாகும். மெய் வினைப் பிரிவில் மூன்றாவது உட்பிரிவில் நிகழும் **செய்து, பெய்து, கொய்து, நெய்து, வய்து** முதலான வினைகள் முறையே ***செய்ந்து, *பெய்ந்து, *கொய்ந்து, *நெய்ந்து, *வய்ந்து** என மீட்டுருவாக்கம் செய்யத்தக்கனவாகும். இந்த வினைகளே பேச்சுத் தமிழில் **செஞ்சு, பெஞ்சு, கொஞ்சு, நெஞ்சு, வஞ்சு** எனத் திரிந்து வழங்குகின்றன. **செய்து, பெய்து, கொய்து, நெய்து, வய்து** முதலிய வினைகளே தொன்மையானவை என்றும் ஒப்புமையாக்கத்தின் விளைவாகச் **செஞ்சு, பெஞ்சு, கொஞ்சு, நெஞ்சு, வஞ்சு** முதலானவை தோன்றின என்றும் ஒரு கருதுகோள் உண்டு (Subrahmanyam, P.S.1971:201).[3]

1.6 கன்னடத்தில் வல்லொற்றின்முன் நிகழும் மெல்லொற்று கெடுவது இயல்பான நிகழ்ச்சியாகும். கருதுக: **சேர்ந்து** (த) / **சேரிது** (கன்) (‹***சேரிந்து**), **வாழ்ந்து** (த) / bāḷidu (<*வாழிந்து), **அகன்று** (த) / **அகலிது** (கன்) (‹***அகலிந்து**), **காய்ந்து** (த) / **காய்து** (கன்). கொடகு மொழியில் **செய்து, கொய்து, நெய்து, வய்து** ஆகிய வினைகள் முறையே **கெஜ்ஜு, கொஜ்ஜு, நெஜ்ஜு, வஜ்ஜு** என வழங்குகின்றன. (Subrahmaniam, P.S. 1971: 127, 128) இவற்றின் அடிநிலை வடிவங்கள் ***கெய்ந்து, *கொய்ந்து. *நெய்ந்து, *வய்ந்து** ஆகியவையாகும். இவற்றினின்றும் திரிந்தமைந்தவையே ***கெஞ்சு, *கொஞ்சு, *நெஞ்சு, *வஞ்சு** ஆகியவையாகும். எனவே ***செய்ந்து, *பெய்ந்து, *கொய்ந்து, *வய்ந்து** ஆகியவற்றினின்றும் தோன்றியவையே **செஞ்சு, பெஞ்சு, கொஞ்சு, நெஞ்சு, வஞ்சு** ஆகிய வடிவங்கள். நடுவண் திராவிடத்தைச் சேர்ந்த பர்ஜி மொழியில் வொர் என்ற வினையடியாகத் தோன்றிய இறந்தகாலப்பகுதி **வெஞ்** என அமையும். இது ***வெஞ்ச்** (*veñj) என மீட்டுருவாக்கம் செய்யத்தக்கதாகும். (Krishnamurti, Bh.2003: 295). இதேபோல் **கொய்** என்பதன் இறந்தகாலப் பகுதி பர்ஜியில் **கொஞ்** என்பதாகும். இதுவும் ***கொஞ்ச்** (*Koñj) (‹***கொய்ந்த்**) என்பதினின்றும் தோன்றியதாகும்.[4]

1.7 உயிர் வினைகளும் மெய் வினைகளும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இறந்தகால விகுதிகளைக் கொண்டவையாகவே கருதப்படுகின்றன. இப்படியிருக்கச் சாத்தியமா? உயிர் வினைகளில் நிகழும் **இன்** என்னும் இறந்தகால விகுதியும் மெய் வினைகளில் நிகழும் இறந்தகால விகுதியாக நம்பப்படும் தகரக் கிளவியும் ஒருங்கிணைந்து

-ந்த்-, **-த்த்-**, **-த்-** மற்றும் அவற்றின் திரிபுகள் ஆகியவை தோன்றி நிகழ வாய்ப்பு உள்ளதா? பழந்தமிழிலும் பிற்காலத் தமிழிலும் மெய் வினைகள் உயிர் வினைகளாக நிகழ்வதை அங்குமிங்குமாகக் காணமுடிகிறது. கருதுக: **இருண்டு/இருளி** (அகம். 139.1), **பயின்றது/பயிலியது** (குறு.2.3), **இயலி** (பதி.78.5) / **இயன்று**, **உடலி** (நற்.37.9)/ **உடன்று**, **கஞலி** (அகம்.141.12) **கஞன்று**, **துழைஇ** (அகம்.80.5)/**துழந்து**, **பிறழிய** (புறம்.287.8)/**பிறழ்ந்த**, **சொற்றது/சொல்லியது**. பழந்தமிழில் ஐகாரவீற்று வினையடிகள் இறந்தகால விகுதியாக **-ந்த்-** அல்லது **-த்த்-** என்பதை ஏற்பதுடன் இகரத்தையும் இறந்தகால விகுதியாக ஏற்கிறது. எ-டு.**சிதைஇ** (நற்.378.9), **நினை-இ** (ஐங்.486.1)/**நினைந்து** '**நினைத்து**, **நினைஇய** (நற்.44.4)/**நினைந்த**, **நினைஇயன** (கலி.15.23)/ **நினைந்தன**, **வளைஇ** (அகம்.84.3)/**வளைத்து**, **அளைஇ** (குறு.158.2)/**அளைந்து**, **அளைஇய** (பரி.1.48)/**அளைந்த**, **சினைஇ** (புறம்.2.13)/**சினந்து**, **சினைஇய** (அகம்.37.7)/**சினந்த**, **சினைஇயோர்** (புறம்.41.18)/**சினந்தோர்**.

1.8 கன்னடத்தில் **தந்து**, **கொந்து**, **நொந்து**, bendu, நட்டு, சுட்டு முதலியவற்றின் வினையடிகளைத் தவிரப் பெரும்பாலான வினையடிகளின் இறந்தகால வினையெச்சங்கள் இகர விகுதியைக் கால இடைநிலையாகக் கொண்டுள்ளன. எ-டு. **கேள்/கேளி**, **அகல்/அகலி**, bal/bali. தெலுங்கில் **தின்று**, **சேர்ந்து**, **கெட்டு** ஆகிய வினைகள் **தினி** (தின்+இ), **சேரி** (சேர்+இ), **செடி** (செடு+இ) என அமைவதும் இங்குக் கருத்தில் கொள்ளத்தக்கதாகும். **வாழ்ந்து**, **கேட்டு**, **சேர்ந்து** முதலான வினைகள் கன்னடத்தில் முறையே bali, **கேளி**, **சேரி** என வழங்குகின்றன. ,,,,,,,,,,,, என்பது நடுவண் திராவிட மொழியாகிய பர்ஜியில் **வெரி** (<*வரி) என வழங்குகிறது. இவையெல்லாம் உயிர்வினைத் திரிபும் மெய்வினைத் திரிபும் தொல் திராவிடத்திலேயே ஒருங்கிணைந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவனவாக உள்ளன. ஆனால், இந்த ஒருங்கிணைப்பு முழுமையாக நடைபெறவில்லை என்பதையே தமிழில் இருவகையான இறந்தகால வினைத் திரிபுகளின் நிகழ்ச்சி புலப்படுத்துவதாக உள்ளது. மெய்வினைத் திரிபுகளில் இந்த ஒருங்கிணைப்புப் புதுமையாக்கம் நிகழ்ந்திருக்க வேண்டும். இதன் தொடர்ச்சியாகவே கன்னடத்தில் **-இத்-** (-id-) என்பதும் தெலுங்கு, கொண்ட, குயி, குவி ஆகிய மொழிகளில் **-இத்** - (-it-) என்பதும் தோன்றி நிகழ்ந்திருக்க வேண்டும்.

1.9 இறவாக்காலச் செய்யும் வாய்பாட்டு வினைகள் செய்யுந்து வாய்பாட்டினவாகவும் நிகழும் நிலையைத் தொல்காப்பியர் **உம்உந்**

தாகும் இடனுமாருண்டே (சொல்.சேனா.292) என்ற நூற்பாவின் மூலம் குறிப்பிடுகிறார். இதனை **உம்** என்ற விகுதியுடன் துகரக் கிளவியைப் புணர்த்தி **உந்து** என்பதைப் பெறுவதன் மூலம் அறிமுடிகிறது. இங்கே உம்மொடு புணரும் அலையொலியாகிய துகரக் கிளவியின் இலக்கணச் செயற்பாட்டினை இன்னதென்று அறியமுடியவில்லை. தொல்காப்பியரும் தெளிவுபடுத்தவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு உந்து என்பதற்கு இணையாக **இன்** என்ற இறந்தகால விகுதியும் நிலையொலியாகிய துகரக் கிளவியும் புணர்ந்து ***இன்ற்உ** என்ற ஓர் இறந்தகால இடைநிலை தோன்றியிருக்க வேண்டும் என்று துணியத் தோன்றுகிறது. இதனின்றும்தான் **-ந்து**, **-த்து**, **-த்** மற்றும் இவற்றின் திரிபுகள் அனைத்தும் கிளைத்திருக்க வேண்டும் என்று துணியலாம். ***இன்ற்உ** (<இன்+த்உ) என்பது பின்வருமாறு இருவகையாகத் திரிந்தமையும்.

1. *இன்ற்உ > {இற்று, இன்றூ}

இற்று, இன்று இரண்டும் திராவிட மொழிகளில் மேலும் பலவாகப் பின்வருமாறு திரிந்து நிகழும்.

2. இற்று > {இத்து, இச்சு, இட்டு 5}

3. இன்று > {இந்து, இஞ்சு, இண்டு 5}

மேலே குறிப்பிட்ட திரிபுகள் ஒவ்வொரு திராவிட மொழிகளிலும் வெவ்வேறாகத் திரிந்து அமையும். எடுத்துக்காட்டாக மலயாளத்தில் **இந்து** என்பது இந்நு >ந்நு எனவும் இஞ்சு என்பது iññu > ññu எனவும் திரிந்தமையும். எடு. ***வரிந்து, வரிந்நு, வர்ந்நு, வந்நு** (=வந்து), **கழிஞ்சு கழிñ்ñu**. **வந்து** என்னும் தமிழ் வினை பின்வருமாறு பெறப்படும்: ***வரிந்து, வர்ந்து, வந்து**. இகரவீற்று வினைப்பகுதிகளும் ஐகாரவீற்று வினைப்பகுதிகளும் யகரவீற்றினவாக மீட்டுருவாக்கம் செய்யப்படும். எ-டு.* **அறிய் › அறி**, **அலய்** (=அலை). முற்றுகரவீற்று வினைப்பகுதிகளையடுத்து **இன்ற்உ** என்பது **ன்ற்உ** என்ற சார்ந்துருபாக நிகழும். **சுடு, நடு, பெறு** முதலிய ஒரு பிரிவு வினைகள் ***இன்ற்உ** என்பதன்முன் **உகரம்** இழந்து **சுட், நட், பெற்** முதலான சார்ந்துருபுகளாக நிகழும். வினைப்பகுதியோ அல்லது அடிநிலை அமைப்பில் நிகழும் ***இன்ற்உ** என்ற இறந்தகால இடைநிலையோ இடம் நோக்கிச் சார்ந்துருபுகளாக மாறி நிகழும்.

1.10 ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழிகளனைத்தும் ஒரே காலக்கட்டத்தில் தோன்றியவை அல்ல. கிளை மொழிகளாகத் திரிந்து

ஒவ்வொரு காலக்கட்டத்தில் ஒவ்வொரு தனி மொழியாகத் தோன்றியவையே குடும்ப மொழிகளாகும். இந்த ஆய்வில் திராவிடக் குடும்பத்தைச் சோந்த மொழிகள் பலவற்றுக்கும் ஒருகால நிலையில் ***இன்ற்உ** என்ற ஓர் இறந்தகால விகுதி குறியீட்டு முறையில் சுட்டப்படுகிறது. ஆயினும் அவை ***இன்ற்உ** என்பதன் திரிபுகளாகிய விகுதிகளையே கால இடைநிலைகளாகக் கொண்டவை என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இறவாக்கால விகுதிகளுக்கும் இந்தக்கூற்று பொருந்தும்.

1.11 இறந்தகால இடைநிலைகளாக இனங்காணப்படும் -**ந்த்**-, -**த்த்**- ஆகியவற்றில் முதலில் நிகழும் நகர, தகர மெய்களைப்பற்றிய விளக்கம் இன்றுவரை கிடைக்கவில்லை. நன்னூல் (நூற்பா. 133) காண்டிகை உரையில் **பறித்த, அறிந்த** ஆகிய வினைகள் முறையே **பறி-த்-த்-அ** எனவும் **அறி-த்-த்-அ** எனவும் ஆராயப்படும். இவற்றுள் **பறித்த** என்பதில் முதலில் நிகழும் தகர மெய் சந்தியாகக் கருதப்படும். **அறிந்த** என்பதன் அமைப்பு **அறி-த்-த-அ** எனக்கொள்ளப்பட்டு அதில் நிகழும் முதல் தகர மெய்யாகிய சந்தியானது விகாரப்பட்டு நகர மெய்யாகத் திரியும் என்று கொள்ளப்படுகிறது. இந்த விளக்கம் நகர, தகரங்களின் தோற்றத்தைக் கண்டறிய துணைபுரியவில்லை. பின்னர் வந்த கால்டுவெல் அறிந்த என்பதில் நிகழும் தகர மெய் கால இடைநிலை என்றும் அதன்முன் நிகழும் நகர மெய்யானது மென்மை கருதிய ஒலிச்சேர்க்கை என்றும் கருதுவார்.[6] மொழியில் மென்மை அல்லது ஒலிநயம் கருதி உருபொலியன்கள் நிகழ்வதில்லை. ஒன்று அவை சாரியையாக இருக்கவேண்டும்; அல்லது இலக்கண விகுதியாக இருக்கவேண்டும். கால்டுவெல் இந்தக் கண்ணோட்டத்தில் உருபனியல் சிக்கல்களை அணுகவில்லை.

1.12 தொல்திராவிட இறந்தகால விகுதிகளாக மீட்டுருவாக்கப்படுவனவற்றுள் *-**ந்த்**-, *-**த்த்**-, ஆகியவையும் அடங்கும் (Subrahmanyam 1971:189). ஒப்பியல் சான்றுகளின் அடிப்படையில் இனங்காணப்படும் இந்தத் தொல்திராவிட இறந்தகால விகுதிகளின் நிகழ்ச்சியை **வாழ்-ந்த், காய்-த்த்** ஆகிய காலப்பகுதிகளில் (Tense Bases) காணலாம். தமிழில் காணப்படும் **செய்து, எய்து, கொய்து, நெய்து, வய்து, பெய்து, தொழுது, உழுது, அழுது,** பொருது ஆகிய வினைகளில் தகரக் கால விகுதியையும் தொல்திராவிட விகுதியாகக் கருதுவார் சுப்ரமண்யம் (1971: 189). இதனை ஏன் -***ந்த்**- என்பதன்

வழித்தோன்றலாகக் கருதக்கூடாது என்பதற்குச் சுப்ரமண்யம் கூறும் காரணம் ஏற்புடையதாகத் தோன்றவில்லை (1971:191). பேச்சுத் தமிழில் நிகழும் **செஞ்சு, பெஞ்சு, நெஞ்சு, வஞ்சு** ஆகியவை ***செய்ந்து, *பெய்ந்து, *நெய்ந்து, *வய்ந்து** ஆகியவற்றினின்றும் ஒப்புமையாக்கத்தின் வழியாகத் தோன்றியது என்பது இவரது கருதுகோள்.[7] கொடகு மொழியில் **ய்ந்த் › ஜ்ஜ்** எனத் திரிந்து **எயதத** (‹*வய்து), **கெஜ்ஜ்** (*கெய்து > செய்து), **கொஜ்ஜ்** (‹*கொய்து), **நெஜ்ஜ்** (‹*நெய்து) ஆகிய வடிவங்கள் தோன்றின என்பது சுப்ரமண்யத்தின் கருதுகோள் (1971: 127, 128, 191) **கொஜ்ஜு** என்பதைக் **கொய்து** என்பதன் திரிபாகக் கருதுவதைவிட ***கொய்ந்து** என்பதன் திரிபாகக் கொள்வதே ஏற்புடையதாகத் தோன்றுகிறது. கருதுக: *கொய்ந்து > கொய்ஞ்சு > கொஞ்சு > கொஜ்ஜு. கிருஷ்ணமூர்த்தி **செய்து** என்பதைக் ***கெய்ந்து** என்பதன் திரிபாகவே கருதுவார் (2003:208).

1.13 தொல்திராவிட இறந்தகால விகுதிகளாக *-**ந்த்**- -***த்த்**- ஆகியவற்றை மீட்டுருவாக்கம் செய்வதுடன் பிரச்சினை தீரவில்லை. இந்த விகுதிகளில் முதலில் நிகழும் நகர மெய்யும் தகர மெய்யும் எங்கிருந்து வந்தன என்பதை ஒப்பீட்டு ஆய்வாளர்கள் விளக்கவில்லை. இதற்கான விடையை ஒப்பீட்டியல் ஆய்வினை மாற்றி அமைப்பதன் மூலம் பெறமுடியும் என்றே தோன்றுகிறது. தொல்திராவிட விகுதிகளாக -***ந்த்**-, -***த்த்**- இரண்டினையும் இனங் காண்பதில் நமக்குக் கருத்து வேறுபாடில்லை. ஆனால் இந்த விகுதிகளின் அடிநிலை வடிவத்தைக் கண்டறிய திராவிட மொழிகளின் ஒப்பீட்டு ஆய்வாளர்கள் முயற்சி மேற்கொள்ளவில்லை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தொல்திராவிடக் கிளை மொழிகளே இன்றைய திராவிட மொழிகள் ஆகும். பல எழுத்தியல் மாற்றங்களே கிளைமொழிகளின் தோற்றத்துக்குக் காரணமான எழுத்தியல் விதிகளாக அமைகின்றன. இந்த எழுத்தியல் விதிகள் -***ந்த்**-, -***த்த்**- ஆகிய இறந்தகால விகுதிகளின் அடிநிலை வடிவங்களின் மீது செயல்படுகையில் மேற்படி விகுதிகள் தோன்றி அமைகின்றன.

1.14 இந்த ஆய்வு தமிழ், கன்னடம் ஆகிய இரண்டு மொழிகளை மட்டும் முதலில் கருத்தில் கொண்டு அமைகிறது. பின்னர் பிற திராவிட மொழிகளுக்கும் இந்த ஆய்வு விரிவு படுத்தப்படுகிறது. தமிழ் இறந்தகால விகுதிகளுள் **இன்** என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.[8] இதனின்றும் **ந்த்/த்த, இன்** ஆகிய கால விகுதிகளை ஒருங்கிணைந்த ஆய்வுக்கு உட்படுத்த முடியும் என்றே தோன்றுகிறது.[9] **நினைந்து/நினைத்து,**

ஈந்து/ஈத்து, **சேர்ந்து/சேர்த்து** ஆகிய இணைகளில் **-ந்து/-த்து** என்பவை **-*ந்த்உ** என்ற அடிநிலை வடிவத்தின் திரிபுகளாகும்.[10] **-*ந்த்உ** என்பதன் அடிநிலை வடிவத்தைக் கண்டறிந்தாலன்றி **-ந்து**, **-த்து** ஆகியவற்றில் முதலில் நிகழும் நகர, தகரங்களின் தோற்றத்தை விளக்க முடியாது. இவற்றையடுத்து நிகழும் தகரக்கிளவி வண்ணனை நிலையில் இறந்தகால விகுதியாகக் கொள்ளப்படும். அப்படியெனில் அதன்முன் நிகழும் நகரமும் தகரமும் எங்கிருந்து வந்தன? இதற்கான விடையாகவே இந்த எழுத்துரை அமைகின்றது.

பகுதி - 2

2.0 போயின்றும் போந்தும்

2.1 பழந்தமிழில் **போயின்று, போயிற்று** என இரண்டு இறந்தகால வினைமுற்றுக்களின் நிகழ்ச்சி காணப்படுகிறது.[11] இந்த வினைகளோடு பொருண்மைத் தொடர்புள்ள **போந்து** என்ற வினையும் காணப்படுகிறது. **போயிற்று** என்பது பொது வினைமுற்றாகவும் (Impersonal finite verb) சிறப்பு வினைமுற்றாகவும் (Personal finite verb) நிகழற்பாலதாகும். **போயிற்றிலன், போயிற்றிலள்** ஆகியவற்றில் நிகழும் **போயிற்று** என்பது பொது வினைமுற்றாகும். இதன் அமைப்பானது **போய்+இற்று** எனக் கொள்ளப்படும். **போயின்று** (<போய்+இன்று) என்பதற்கும் இது பொருந்தும். **போயிற்று, போயின்று** ஆகியவை சிறப்பு வினைகளாக நிகழ்கையில் **போய்-இன்+த்உ**, **போய்-இன்+து** என்ற அமைப்பினையுடைய ஒன்றன்பால் இறந்தகால வினைகளாகக் கொள்ளப்படும். **போந்து** என்பது **போந்தென** (குறு.39.1, நற்.275.2) என்ற அமைப்பில் பொது வினைமுற்றாக நிகழ்கின்றது. **போந்திலன், போந்திலள்** ஆகிய வினைகளிலும் **போந்து** என்பது பொது வினைமுற்றாக நிகழ்கிறது. **போந்தான், போந்தாள்** என்பவற்றில் நிகழும் போந்து என்பது இறந்தகாலப் பகுதியாகும். இது உகர வெற்றொலி சேர்ந்து இறந்தகால வினையெச்சமாகவும் நிகழும். கன்னடத்தில் **ஹோதனு** (<போதனு), **ஹோதளு** (<போதளு) ஆகியவை **போந்தான், போந்தாள்** ஆகியவற்றோடு ஒருங்கிணைந்த ஆய்வுக்கு உரியதாகும்.[12] அதாவது, **போந்து** (தமிழ்), **போது** (கன்) ஆகியவை ஒரு குறிப்பிட்ட அடிநிலை வடிவத்திலிருந்து வருவிக்கப்பட வேண்டியவையாகும். **போயின்று, போயிற்று** இரண்டின் அடிநிலை வடிவம் ***போயின்த்உ** என இந்த ஆய்வில் இனங்காணப்படுகிறது. இதனின்றும் **போயின்று,**

போயிற்று, **போந்து** (தமிழ்), **போது** (கன்) ஆகியவைமட்டுமல்ல **போயித்து** (பார்ப்பன வழக்கு), **போச்சு** (பேச்சுத்தமிழ்), **போய்த்து** (கன்) ஆகியவையும் பின்வருமாறு வருவிக்கப்படும். இந்த ஆய்விலும் பின்னர் மேற்கொள்ளப்படும் ஆய்விலும் ***ன்ற்உ** என்பதன் ஈற்று உகரம் உயிர் விகுதிகளின்முன் இறுதியில் கெடும்.

4 (1) (1) *போயின்ற்உ >போயிற்று (தமிழ்) (இன்ற்உ > இற்று)

(2) போயின்ற்உ > போயின்று (பழந்தமிழ்) (இன்ற்உ > இன்று)

(2) (1) *போயின்ற்உ > போயின்று (இன்ற்உ > இன்று)

(2) போயின்று > போயிந்து (இன்று > இந்து)

(3) போயிந்து > போய்ந்து (இ > ф / ய்-ந்த்)

(4) போய்ந்து > போந்து (பழந்தமிழ்) (ய் > ф /-ந்த்)

போந்து + ஆன் > போந்தான்

(5) போந்து > போது (கன்) (ந் > ф /-த்)

போது +அனு > போதனு 'போந்தான்'

(3) (1) *போயின்ற்உ >போயிற்று (இன்ற்உ > இற்று)

(2) போயிற்று > போயித்து (பார்ப்பனத் தமிழ்) (இற்று > இத்து)

(3) போயித்து > போய்த்து (கன்) (இ > ф / ய்-த்த்)

(4) (1) *போயின்ற்உ > போயிற்று (இன்ற்உ > இற்று)

(2) போயிற்று > போயிச்சு (இற்று > இச்சு)

(3) போயிச்சு > போய்ச்சு (இ >ф/ய்-ச்ச்)

(4) போய்ச்சு > போச்சு (பேச்சுத்தமிழ்) (ய் >ф / -ச்ச்)

போந்து என்பதில் நிகழும் நகரத்துக்கான விடை இந்த ஆய்வில் கிடைத்துள்ளது. அது ***போயின்ற்உ** என்பதில் உள்ள னகரத்தின் திரிபாகும்.

2.2 மேலும் சில தமிழ் - கன்னட இறந்தகாலப் பகுதிகளில் கால விகுதியாக நிகழும் **-ந்த்- / -த்த், -இத்-** -id- ஆகியவை **இன்ற்உ** என்பதனோடு இந்த ஆய்வில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இந்த வகையில் **கேள், ஆள், கொல், பெறு, தின்,** ஓடு, **நட, மறய்** (=மறை), **கொய், அறி,** கெடு, **நூல், சா, சொல், நில்** ஆகிய வினைப்பகுதிகள் இங்கே கருத்தில் கொள்ளப்படுகின்றன.

2.3 கேள் என்ற வினையடியாகத் தோன்றி நிகழும் இறந்தகாலப் பகுதிகள் தமிழில் கேட்டு என்பதும் கன்னடத்தில் கேளிது என்பதுமாகும். கேளித்து என்பது கன்னட ஒன்றன்பால் வினையாகும். இவை மூன்றும் (அதாவது கேட்டு, கேளிது, கேளித்து) பின்வருமாறு வருவிக்கப்படும்.

5 (1) (1) *கேளின்றஉ > கேளிற்று (இன்றஉ > இற்று)

(2) கேளிற்று > கேளித்து (இற்று > இத்து)

(3) கேளித்து > கேள்த்து (இ >ϕ -த்த்)

(4) கேள்த்து > கேள்ட்டு (த்த் > ட்ட் / ள் -)

(5) கேள்ட்டு > கேட்ட்டு (ள் > ட் / -ட்ட்)

(6) கேட்ட்டு > கேட்டு (தமிழ்) (ட் > ϕ ட்-ட்)

(2) (1) *கேளின்றஉ > கேளின்று (இன்றஉ > இன்று)

(2) கேளின்று > கேளிந்து (இன்று > இந்து)

(3) கேளிந்து > கேளிது (கன்) (ந் > ϕ -த்)

கேளிது+அனு > கேளிதனு 'கேட்டான்'

(4) கேளிது கேள்து (கன்) (இ > ϕ / -த்)

கேள்து + அனு > கேள்தனு 'கேட்டான்'

2.4 கேள்து என்பது தொன்மையான வடிவம் என்றும் கேளிது என்பது வரலாற்று நிலையில் பிந்திய வடிவம் என்றும் ராபர்ட் கால்டுவெல் (1856). சுப்ரமண்யம் (1971), எமினோ (1994)13 ஆகியோர் கருதுகின்றனர். கேள்து இலக்கிய வழக்கு என்றும் எனவே அதுவே தொன்மையான வழக்கு என்றும் கால்டுவெல் கருதுகிறார். மேலே நிகழ்த்திய ஆய்வு இந்தக் கருதுகோளுக்கு இசைவாக இல்லை என்பது தெளிவு. கேளிது என்ற வடிவம் ஒரு தொன்மையான கிளைமொழியில் பாதுகாக்கப்பட்டு இன்னொரு இலக்கியத் தொன்மொழியில் அது இகரத்தை இழந்து கேள்து என அமைந்தது என்று கொள்வதே பொருந்தும்.

(3) (1)* கேளின்றஉ > கேளிற்று (இன்றஉ > இற்று)

(2) கேளிற்று > கேளித்து (பழங் கன்) (இற்று > இத்து)

(3) கேளித்து > கேளித்உ (கன்) (த்த் > த்)

கேளித்து/கேளித்உ 'கேட்டது' இரண்டும் வரலாற்று நிலையில் முன் பின்னாக அமைந்த வழக்குகளாகும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

சங்கச் செய்திகள்

03.04.2018 அன்று சங்க வளாகத்தில் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களின் நினைவேந்தல் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் தமது உரையில் "ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள் இலக்கிய ஆராய்ச்சித் துறையில் வித்தகராக விளங்கியவர்; ஏடு பார்த்து எழுதுதல், கல்வெட்டுகளைப் படியெடுத்தல், செப்பேடுகளைத் தேடிக் கண்டெடுத்தல் போன்ற செயல்களால் ஆராய்ச்சிப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்; செந்தமிழில் சீரிய புலமை பெற்று விளங்கியவர்; தமிழ் உணர்வுள்ள நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கியவர்; செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்களில் தமிழ் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியவர்; 'பல்துறை முற்றிய புலவர்', 'உரைவேந்தர்', 'தமிழ்ப் பேரவைச் செம்மல்', 'தமிழ்த்தொண்டு செய்த பெரியார்' முதலிய பல்வேறு பட்டங்களும் பாராட்டுக்களும் பெற்ற பெருமைக்குரியவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

18.4.2018 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் செந்தமிழ்க் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சார்பாக இந்நாள் மாணவர்களுக்கு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வாழ்த்தும் விடைகோள் விழா பாண்டித்துரைத் தேவர் அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மதுரை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுலவர் திரு.செ.ஜெயபால் அவர்கள் தலைமை வகித்தார். முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் திரு.மு.இளங்கோவன் மற்றும் செயலாளர் வை.சங்கரலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நன்னிலம் கேசவன் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா இனிதே நடைபெற்றது.

24.04.2018 அன்று வ.சுப.மாணிக்கம் அவர்களின் நினைவேந்தல் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது. உதவிப் பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை அவர்கள் தமது உரையில் "வ.சுப.மாணிக்கம்

அவர்கள் நேர்மை, எளிமை இவற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்; மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தராக இருந்து மூத்த அறிஞர் பெருமக்களைத் தமிழாராய்ச்சிக்குப் பணியமர்த்தித் தமிழாராய்ச்சியை நிலைநிறுத்தியவர்; தொல்காப்பியக் கடலில் மூழ்கி முத்தெடுத்த வல்லுநர்; தமிழ்க் காதலால் வள்ளுவத்தை வரைந்து பார்த்தவர்; திருவாசகத் தேன் உண்ட தும்பி; கற்றோர் உள்ளத்தில் கலந்த மேதை; தமிழ்வழிக் கல்விக்குத் தெருவிலிறங்கித் தமிழ் முழக்கம் செய்தவர்; மாணவர்களுக்கு தமிழ் இலக்கிய அறிவையும், தமிழுணர்வையும் ஊட்டியவர். வள்ளல் அழகப்ப செட்டியார் அவர்களின் கல்வி நிறுவனத்தில் தமிழ்ப் பணியைத் தொடர்ந்தவர். ஆய்வு நூல்கள், படைப்பு நூல்கள், திறன் நூல்கள், புத்தாக்கச் சொற்கள் தந்து, தம் வாழ்நாளுக்குப் பிறகும் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் ஆக்கங்களைத் தந்த மூதறிஞர்” என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். முன்னதாக வ.சுப.மாணிக்கம் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

25.04.2018 அன்று ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் நினைவேந்தல் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது. உதவிப் பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி அவர்கள் தமது உரையில் “ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் தமது எழுத்தாலும் பேச்சாலும் தமிழுக்குப் பெருமை சேர்த்த பேரறிஞர்; தமிழுக்கு இணையாக ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர். இருபத்தைந்து ஆண்டு காலம் சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தமிழ்ப் பேரகராதியைத் தொகுக்க தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் வையாபுரிப் பிள்ளைக்கு உதவியர்; சிறந்த மேடைப் பேச்சாளர்; இருபதுக்கும் மேற்பட்ட உரைநடை நூல்களை எழுதியவர்; நான்கு நூல்களைப் பதிப்பித்தவர்; இவர் தமிழகம் முழுவதும் வானொலி நிலையங்கள், பல்வேறு இலக்கிய அமைப்புகளில் ஆற்றிய இலக்கிய சொற்பொழிவுகளின் தொகுப்புகளும் பல நூல்களாக வந்துள்ளன. இவரது ‘தமிழின்பம்’ என்ற நூலுக்கு இந்திய அரசின் சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது. ‘செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை’ என்று சுத்தானந்த பாரதியால் போற்றப்பட்டவர்” என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். முன்னதாக ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

26.04.2018 அன்று மனோன்மணியம் சுந்தரனார் அவர்களின் நினைவேந்தல் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது. உதவிப்பேராசிரியர் முனைவர் அ.நந்தினி அவர்கள் தமது உரையில், "மனோன்மணியம் சுந்தரனார் அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை எழுதியவர்; 'மனோன்மணியம்' என்ற புகழ்பெற்ற நாடக நூலைப் படைத்தவர். இளமையிலேயே தேவார, திருவாசகங்களையும் சமய வழிபாட்டு நூல்களையும் கற்றவர். திருவனந்தபுரத்தில் சைவப் பிரகாச சபையினைத் தோற்றுவித்து சமயத் தொண்டாற்றியவர். திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். முன்னதாக மனோன்மணியம் சுந்தரனார் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மதுரையின் தங்கப் பூ

இலக்கண வெளிச்சம் தந்தாய்!
இலக்கிய நுண்மை தேடித்
துலக்கினாய்! திறந்து வைத்தாய்
சுடர்த்தமிழ்க் கருவூ லங்கள்!
அலைக்கின்ற தீமை ஏதும்
அருந்தமிழ் மொழிக்கு வந்தால்
சிலைக்கின்ற இடியே றாகத்
திக்குகள் கலங்க வைத்தாய்!

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியன்

ஜூன் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

வெள்ளைவாரணர்
(ஜூன்.13)

அண்ணாமலை செட்டியார்
(ஜூன்.15)

கவிஞர் சுரதா
(ஜூன்.19)

ச.மெய்யப்பனார்
(ஜூன்.28)

(கோ)விந்தன்
(ஜூன்.30)



புதுமைப்பித்தன்
(ஜூன்.30)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**	முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**	முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**	முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**	முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**	முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**	முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்,** 2/861, இராசராசன் தெரு. மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்,** 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1